விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 28 சனிக்கிழமை (13.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 237

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சட்டத்தை கையிலெடுத்தால் கடும் நடவடிக்கை!

## பாதுகாப்புச் செயலாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுமக்கள் சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டால், பொலிஸ் நிலையங்களைத் தாக்கினால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

அண்மைய நாட்களில் கிறீஸ் பூதங்கள் என்று கூறப்படுபவர்கள் தொடர்பாக அப்பாவிகளும், பொலிஸாரும் பொதுமக்களால் தாக்கப்படும் சம்பவங்களை நாம் கண்டுள்ளோம். இத்தகைய நடவடிக்கையை மக்கள் எதிர்காலத்தில் மேற்கொண்டால் அவர்களுக்கு எதிராக நாம் கடும் நடவடிக்கை மேற்கொள்வோம் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறினார்.

முதல் தொகுதி பொலிஸ் அவசர மருத்துவ தொழில் நுட்பவியலாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பொலிஸார் செயற்படாமையின் காரணமாகவே அப்புத்தளையில் இரு அப்பாவிகள் கிறீஸ் பூதங்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் ஆத்திரமடைந்த கிராமவாசிகளால் கொல்லப் பட்டனர் எனவும் அவர் கூறினார்.



பொலிஸார் யுத்தத்தின் போது பெரும் சேவையாற்றினர். ஆனால் இப்போது யுத்தத்தின் பின்னரான சூழ்நிலைக்கு ஏற்பவும் மக்கள் சார்பானதாகவும் மாற வேண்டும் எனவும் பாதுகாப்புச் செயலர் மேலும் கூறினார். (எ-5)



ஐ.தே.கவின் தலைவராக கரு ஜெயசூரியவை நியமிப்பதற்கான தீர்மானம் அக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களால் நேற்று கொழும்பில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தை அடுத்து நிகழ்ந்த தேநீர் விருந்துபசாரத்தில் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவும் கலந்துகொண்டுள்ளதை படங்களில் காணலாம்.

# நல்லூரில் இன்று மஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தில் 10 ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா இன்று நடைபெறும்.

வசந்தமண்டப் பூசையைத் தொடர்ந்து மாலை 5.00 மணிக்கு முருகப் பெருமான் திருமஞ்சத்தில் வெளிவீதியுலா வருவார். (ச)

# தமிழகத்தில் நில அதிர்வு

(சென்னை)

தமிழகத்தின் 07 மாவட்டங்களில் நேற்று காலை 11.38 மணியளவில் திடீர் நில அதிர்வு ஏற்பட்டது. இதனால் மக்கள் பீதியடைந்தனர். வீடுகள் குலுங்கின, பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் உருண்டதால் வீடுகளில் இருந்தவர்கள் அலறியடித்து வெளியே ஓடி வந்தனர். அரியலூர் மாவட்டத்தை மையமாகக் கொண்ட நில அதிர்வு ரிக்டர் அளவுகோலில் 3.5 புள்ளிகளாக பதிவு செய்யப்பட்டது.

பெரம்பலூர் மாவட்டம் எறையூர், வேப்பந்தட்டை ஆகிய பகுதிகளில் வீடு மற்றும் அலுவலகங்களில் இருந்தவர்கள் நில அதிர்வை உணர்ந்தனர். கடலூர் மாவட்டத்தில் பெண்ணாடம், திட்டக்குடி மற்றும் சேலம் மாவட்டத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

# வாழைச்சேனையில் அகப்பட்ட மர்ம மனிதன்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பிறந்துருச்சேனை கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு நடமாடிய மர்ம மனிதன் என்ற சந்தேகத்தில் ஒருவரை நேற்று மாலை பொதுமக்கள் வாழைச்சேனை புகையிரத நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டியதனை அடுத்து அங்கு பதற்ற நிலை உருவாகியது.

நேற்று முன்தினம் இரவு வாழைச்சேனை பிறந்துருச்சேனையில் மர்ம மனிதனின் நடமாட்டம் இருந்ததாகச் செய்தி பரவியதை தொடர்ந்து பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. இதன் போது அங்கு நடமாடிய மர்ம மனிதர்கள் எனக் கருதப்பட்ட இனந்தெரியாத நபர்களை பொதுமக்கள் பிடிக்க முற்பட்டபோது தப்பிச் சென்றுள்ளனர்.

இந் நிலையில் நேற்று மாலை 6.00 மணியளவில் வாழைச்சேனை புகையிரத நிலையத்தில் வைத்து, நேற்று முன்தினம் நடமாடிய மர்ம மனிதன் எனப் (20ஆம் பக்கம் பார்க்க)

# கடலில் குளிக்கச் சென்ற மாணவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடலில் குளிக்கச் சென்ற பாடசாலை மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார். குருநகர் கடற்கரை வீதியைச் சேர்ந்த சென். மேரிஸ் வித்தியாலய மாணவன் நந்தகுமார் துஷ்யந்தன் (வயது- 16) என்பவரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

நண்பர்களுடன் பூநகரி வன்னித்தலையிலுள்ள செபஸ்தியர் கோயிலுக்குச் சென்று அங்கு கடலில் குளிக்கச் சென்ற வேளையிலேயே இவர் சேற்றில் அகப்பட்டு மூழ்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்போது அங்கு நின்ற கடற்படையினர் மாணவனை மீட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். எனினும் சிகிச்சை பலனின்றி அம் மாணவன் உயிரிழந்துள்ளார். (ச-2,8)

# இலங்கைக்கு உதவ சீன அரசு உறுதி

## வீட்டோவை பயன்படுத்தவும் இணக்கம்

(கொழும்பு)

சர்வதேச அரங்கில் கடும் அழுத்தங்களை எதிர்கொண்டு வரும் இலங்கைக்கு தேவை ஏற்படும் வேளையில் தனது முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க சீனா உறுதியளித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் சீனப் பிரதமர் வென் ஜியா பாவே இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த ஒத்துழைப்பிற்கான உறுதிமொழி வழங்கப்பட்டதாக அவர் கூறினார்.

தேவைப்படும் வேளையில் சீனா வழங்கவுள்ள முழுமையான ஆதரவென்பது இலங்கைக்கு எதிராக பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்படக் கூடிய பொருளாதார தடை முயற்சிகளுக்கு எதிரான சீனாவின் வீட்டோப் பலத்தையே குறிப்பதாக ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

சீனாவுக்கு 04 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் சீனப் பிரதமருடன் சந்திப்பொன்றை மேற்கொண்டார். (20ஆம் பக்கம் பார்க்க)

# கரு ஜெயசூரியவுக்கு தலைமைப் பதவி?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு கட்சியை வெற்றிப் பாதைக்குக் கொண்டுசெல்லும் முயற்சியின்போது எழும் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்வதற்கு பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தயாராகவுள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்கவை கட்சியிலிருந்து அடித்துத் துரத்துவதற்கு நாம் முயற்சிக்கவில்லை. அவரது ஆலோசனைகளும் ஆதரவும் எப்பொழுதும் எங்களுக்கு வேண்டும் என்று தயாசிறி ஜயசேகர எம்.பி. குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக கரு ஜெயசூரியவை நியமிப்பதற்கான தீர்மானம் அக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர்களால் நேற்று கொழும்பில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தயாசிறி ஜயசேகர எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் கூறியதாவது, (20ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மண்ணில் ஓராண்டு நிறைவுடன்
புதிய பரிணாமத்தில்...
நவீன் செரமிக்


Metro Engineering (Pvt) LTD
No.212, Palaly Rd, Jaffna. 021 222 0044 / 021 222 0033
No.05, Stanly Rd, Jaffna. 021 222 4777 / 021 222 4888

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பூந்தோட்டம் முகாம் பகுதிக்கான நீர், மின் விநியோகம் நிறுத்தம்

## மக்களை வெளியேற்ற அரசு நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் அகதிகள் முகாமின் நீர் விநியோகத்தையும் மின்சாரத்தையும் அரசாங்கம் நிறுத்தியுள்ளதாக பி.பி.சி. சிங்கள சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

பூந்தோட்டம் முகாமிலிருந்து வெளியேற மறுத்துவரும் அகதிளை அங்கிருந்து வெளியேற்றும் நோக்கத்துடனேயே இந்த நீர் மற்றும் மின்சாரத் தடைகளை திட்டமிட்டு ஏற்படுத்தி வருவதாக பாதிக்கப்பட்டமக்கள் தெரிவித்துள்ளனர். யுத்தம் மூண்ட காலத்திலிருந்து, கடந்த 19 ஆண்டுகளாக இந்த அகதிகள் பூந்தோட்டம் முகாமில் வசித்து வருகின்றனர்.

மீள்குடியேறுவதற்குரிய எவ்வித வாழ்வாதாரங்களும் இல்லாத நிலையில் அங்கிருந்து வெளியேற இவர்கள் மறுத்து வருகிறார்கள். இங்கு தங்கியிருந்த 16ஆயிரம் அகதிகளில் பெரும்பாலானோர் வெளியேறிவிட்ட நிலையில், எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற 183 குடும்பங்களைச் சேர்ந்து ஆயிரத்து 163 பேர் தொடர்ந்தும் இந்த முகாமில் தங்கியுள்ளனர்.

மீள்குடியேறுவதற்குரிய எவ்வித வசதியும் எம்மிடம் இல்லை மீள்குடியேறும் இடங்களில் வேலை வசதியும் இல்லை. எங்கள் பிள்ளைகள் இந்த முகாமில்தான் பிறந்தார்கள். எங்களுக்கு வேறு போக்கிடம் இல்லை என அகதிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் மீள்குடியேறுவதற்குரிய வீடுகளை கட்டித்தருவதாக இருந்தால்நாங்கள் வெளியேறமுடியும். ஆனால் சில கூரைகளை மட்டும் தருவதாகக் கூறுகிறார்கள்.

எங்கள் குடும்ப ஆண்களை போரில் பலி கொடுத்த எங்களால் எப்படி தனித்து வீடுகளை கட்டி குடியேறமுடியும் எனக் கேட்டார் கணவனை இழந்த ஒரு கைம்பெண்.

அரசாங்கம் நீர், மின்சார வசதிகளை தடை செய்துள்ளதால் இங்குள்ள மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு தங்கியிருக்கும் 13 மாணவர்கள் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கும் 28 பேர் க.பொ.த. சாதாரண பரீட்சைக்கும் தோற்ற தயாராகி வருகின்றனர். தவிர 53 மாணவர்கள் 5ஆம் வருட புலமைப் பரிசில் பரீட்சைக்கும் தயாராகி வருகின்றனர்.

ஐ.நா. அகதிகள் அமைப்பின் அதிகாரிகள் நேற்று வியாழக்கிழமை இந்த முகாமுக்கு விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்து சென்றுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (ஏ)

## ஆளுநருடனான சந்திப்பு இட மாற்றம்

(யாழ்ப்பாணம்)

புலமைப் பரிசில் அடிப்படையில் இந்தியா செல்வதற்கு க.பொ.த உயர்தர வகுப்பைச் சார்ந்த தெரிவு செய்யப்பட்ட 40 மாணவர்களை ஆளுநர் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆளுநர் செயலகத்தில் சந்திப்பதற்கு ஏற்பாடாகியிருந்தது. எனினும் இந்நிகழ்வு தற்போது யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூட மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## விளையாட்டுப் பணிப்பாளராக மீண்டும் அண்ணாதுரை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாதுரையின் இட மாற்றம் இரத்துச் செய்யப்படுவதாக நேற்று கடிதம் மூலம் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாதுரை வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு இடமாற்றப்படுவதுடன் வடக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளராக எஸ்.விமலராஜன் நியமிக்கப்பட்டார்.

இம் மாற்றங்கள் நாளை மறுதினம் 15 ஆம் திகதி அமுலுக்கு வரவிருந்த நிலையில் நேற்று ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மர்ம மனிதர்கள் பிடிபட்டால் பொலிஸில் ஒப்படைக்க பணிப்பு

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மர்ம மனிதர்கள் எவரேனும் பிடிப்பால் அவர்களை காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறும் இது குறித்து யாரும் அச்சமடைய தேவையில்லையென்றும் காத்தான்குடி பிரதேசத்திற்குட்பட்ட பொதுமக்களுக்கு பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, இரவு 12 மணிக்குப்பின்னர் தேவையற்ற விதத்தில் யாரும் வீதிகளில் நடமாடக் கூடாதெனவும் இதன்போது பொலிஸார் அறிவித்துள்ளனர். மேலும் பொலிஸாரின் இவ்வறிவித்தல் காத்தான்குடியிலுள்ள சில ஜும் ஆ பள்ளிவாசல்களின் மூலமும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் ஊழியர்களிடையே நேற்றிரவு கைகலப்பு

### ஒருவர் படுகாயம் ; மற்றொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணி புரியும் தொழிலாளர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலால் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் வைத்திய அதிகாரிகள் தங்குமிட விடுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பணியாளரான அரியாலையைச் சேர்ந்த ஆனந்தன் தயாபரன் (வயது 20) என்பவர் தலையில் படுகாயமடைந்தார்.

தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படும் நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, யாழ்.போதனா வைத்தியசாலையில் இரவுக் கடமையில் ஈடுபட்டிருந்த மேற்படி நபர் பணியிலிருந்த சுத்திகரிப்பு தொழிலாளி ஒருவருக்கு அப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த குப்பைத் தொட்டியிலிருந்த குப்பையை அகற்றுமாறு வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக கூறியுள்ளார்.

அதற்கு குறித்த சுத்திகரிப்பு தொழிலாளி தகாத வார்த்தைகளை பிரயோகித்து பேசியதுடன் அவ் இளைஞன் மீது சரமரியாக தாக்கியதோடு கொலை அச்சுறுத்தலும் விடுத்துள்ளார்.

இச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பணியிலிருந்த நான்கு சுத்திகரிப்பு பெண் தொழிலாளர்கள் தாக்குதலை தடுக்க முற்பட்டுள்ளனர்.

இருந்தும் அவர்களையும் குறித்த நபர் சரமாரியாக தாக்கியுள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த வைத்தியசாலை பொலிஸார் குறித்த நபரை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

தாக்குதலை மேற்கொண்ட நபர் மது போதையில் கடமையில் ஈடுபட்டிருந்தார் என யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு சுத்திகரிப்பு தொழிலாளிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட அதிகாரியும் பணியை விட்டு நிறுத்தப்பட்டுள்ளார் எனவும் அந்த அதிகாரியும் அவ்வேளையில் மது போதையில்தான் கடமையில் ஈடுபட்டார் என்றும் அந்தவட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம் பெற்று வருவதாகவும், எனினும் அது தொடர்பில் எவரும் முறையீடுகள் செய்வதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-6)


## தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

இடம் : கேட்போர் கூடம்,
யாழ்.பொது நூலகம்.

காலம் : 14.08.2011 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 10.00 மணி

பங்குபற்றுனர் : ஆர்வமுடையோர் அனைவரும்.

"பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்டவிரோதமானதாகும்"

வடமாகாண அலுவலகம்,
இலங்கை மத்திய வங்கி.



## மணிவிழா நாயகனே மாண்புயர வாழ்க

### பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்



சீரார் நலனோங்கச் சிறந்தொளிரும் கல்வி ஞானம்
சிறப்புடனே கற்றுணர்ந்த சீர்மிகு பேராளன்
பாரார் புகழ்ந்துரைக்கப் பண்புடனே பல்கலையில்
பங்குடனே ஏற்றுணர்ந்த பாசமிகு பேராசான்
ஆராத அன்பினோடு அனைவரையும் அரவணைத்தே
அன்னையைப் போல் அருள்சுரக்கும் தேசமிகு அருளாளன்
வேராகி விழுதாகி வீற்றிருந்தே இசை பரப்ப
விரும்பியே வாழ்த்துகின்றோம் வாழ்க பல்லாண்டே!

இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி
காலம்: 14.08.2011 பி.ப. 02மணி (ஞாயிற்றுக்கிழமை)

எமது கல்லூரியின் முதற்பேராசிரியரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளருமாகிய பெருமதிப்புயர் பேராசிரியர் க.தேவராஜா அவர்கள் நீடூழி வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

(அ-4031)

வாழ்த்துவோர்:
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்.

# இன்று ஒரு தகவல்

## கடவுளைக் காணவேண்டும்!

ஒரு ஊரில் ஞானம்பெற்ற சித்தர் ஒருவர் இருந்தார்.

ஒருநாள் அந்நாட்டு மன்னன் அவரைச் சந்திப்பதற்காக வந்தார்.

சித்தர் மன்னனைப் பார்த்து "என்ன வேண்டும்" என்று கேட்டார்.

அதற்கு அவர் "நான் கடவுளைப் பார்க்க வேண்டும்" அதற்கு நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும் என்றார்.

சித்தர் சிறிதுநேரம் யோசனை செய்தார்.

"சரி போய்விட்டு நாளைக்கு வா!" என்றார்.

அதேமாதிரி மன்னன் சென்றுவிட்டு மறுநாள் வந்தார்.

"இங்கே நீ என்னோடு ஒரு வாரகாலம் தங்க வேண்டும்" என்று சித்தர் மன்னனைப் பார்த்துக் கூறினார். அதற்கு மன்னர் சம்மதித்தார்.

ஒரு பிச்சைப் பாத்திரத்தை எடுத்து கையிலே கொடுத்தார். மன்னன் எதுவுமே புரியாமல் வாங்கிக் கொண்டு "இதை என்ன செய்வது" என்று கேட்டார்.

"இதை எடுத்துக் கொண்டு அயல் கிராமங்களுக்குப் போய் வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்துக் கொண்டு வரவேண்டும். அப்படி வந்த பின்புதான் உனக்கு சாப்பாடும் ஓய்வும் கிடைக்கும்" என்றார்.

தொடர்ந்து ஒரு வாரம் இப்படி செய்துவர எட்டாம் நாள் நாம் கடவுளைப் பற்றி யோசிக்கலாம் என்றார்.

இப்படி இவர் சொன்னதைக் கேட்டதும் அரசன் அதிர்ந்து போனான். தன்னுடைய சொந்த நாட்டில் சொந்தக் குடிமக்களிடம் பிச்சை எடுப்பதா? என்று யோசித்துப் பார்த்தான்.

பின்னர் மெதுவாக சித்தரைப் பார்த்து ஐயா... சொந்த நாட்டில் பிச்சை எடுப்பது என்பது எனக்கு வெட்கமாக இருக்கிறது. எங்கேயாவது வெளித் தேசத்தில் பிச்சை எடுக்கப் போகலாமா? என்று கேட்டார்.

அதற்கு சித்தர் சம்மதிக்கவில்லை.

"இதோ பார்... பிச்சை எடுக்க முடியவில்லை என்றால் பேசாமல் திரும்பி அரண்மனைக்கு போய்விடு! அதன் பின்னர் கடவுளைப் பற்றி பேசுவதற்கு என்னைத் தேடி வரக்கூடாது!" என்றார்!

மன்னன் தயங்கினான். பின்னர் மனதைத் திடப்படுத்திக் கொண்டு சம்மதித்தான்.

"சரி... ஒரு வார காலம் இங்கே தங்கி நின்று தாங்கள் கூறியதுபோல் சென்று பிச்சை எடுக்கிறேன்." என்றார்.

ஒரு வாரம் தெருத்தெருவாகப் பிச்சைப் பாத்திரத்துடன் அலைந்து திரிந்து ஊர் குடிமக்களிடம் பிச்சை எடுத்தார்.

சித்தர் கூறியதுபோல ஏழு நாட்கள் முடிவுற்றது.

எட்டாவது நாள் வந்தபோது சித்தர் மன்னனைக் கூப்பிட்டார்.

"இனி கடவுளைப் பற்றி என்னிடம் கேட்கலாம்!" என்றார்.

அதற்கு அரசன் "இனிமேல் கடவுளைப் பற்றி கேட்பதற்கு ஒன்றும் இல்லை" என்றார்.

அதற்கு சித்தர் ஒரு வார காலம் பிச்சை எடுத்த பின்புதான் கடவுளைக் காணமுடியுமென்று நான் கனவு கூட காணவில்லை என்றார்.

"அப்படியென்றால்... பிச்சை எடுத்த காலத்தில் என்னதான் நடந்தது?" என்று வினாவினார்.

"சுவாமி! ஒரு வார காலம் பிச்சைப் பாத்திரம் ஏந்தியதை அடுத்து எனது ஆணவம் அழிந்து விட்டது. அது இப்போது இருக்கும் இடமே தெரியவில்லை! பிச்சைக்காரனாக இருந்தபோது கிடைக்கப் பெற்றதை மன்னனாக இருக்கும்போது பெற முடியாது என்பதைப் புரிந்து கொண்டேன்" என்று மன்னன் பதிலளித்தார்.

"இதைத்தான் அடக்கம் பிறந்தவுடன் தெய்வீகக் கதவுகள் திறந்து கொள்கின்றன" என்கிறார் ஓசோ என்ற பெரியவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ். மாவட்டத்தில் பெற்றோரை இழந்த நிலையில் 7743 சிறுவர்கள்

## மாவட்ட செயலக அறிக்கையில் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பெற்றோரை இழந்த நிலையில் 7 ஆயிரத்து 743 சிறுவர்கள் வாழ்ந்து வருவதாக யாழ். மாவட்ட செயலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, யாழ். மாவட்டத்தில் 2 இலட்சத்து 4 ஆயிரத்து 388 சிறுவர்கள் உள்ளனர்.

இதில் 6 ஆயிரத்து 118 சிறுவர்கள் தந்தையை இழந்தும் ஆயிரத்து 625 சிறுவர்கள் தாயை இழந்தும் வாழ்ந்து வருவதாக அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி தாய், தந்தை இருவரையும் இழந்து 414 சிறுவர்கள் உள்ளனர்.

மேலும் 253 சிறுவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ளதோடு 65 சிறுவர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் ஆயிரத்து 413 சிறுவர்கள் தங்கியிருப்பதோடு, மன ரீதியாக 221 பேர் பாதிப்படைந்துள்ளனர். அத்தோடு 174 சிறுவர்களுக்கு மருத்துவ உதவிகள் தேவைப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட 82 சிறுவர்களும் இளம் வயதில் கர்ப்பம் தரித்த 75 பேரும் கடந்த கால போரினால் தாய், தந்தையை இழந்த 177 சிறுவர்களும் உள்ளனர் என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-6)

# கோம்பாவிலில் 23 ஆம் திகதி மக்கள் மீள்குடியேற்றம்

## முல்லைத்தீவு அரச அதிபர் அறிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கோம்பாவில் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களில் மீள்குடியேற்றத்திற்காக சொந்த இடத்திற்கு செல்ல விரும்பும் நண்பர்கள், உறவினர்களிடம் தங்கியுள்ள குடும்பங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு மீள் குடியேறக்கூடிய ஆயத்தங்களுடன் மு/விக்னேஸ்வரா.அ.த.க. பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட அர சாங்க அதிபர் அ.பத்திநாதன் அறிவித்துள்ளார்.

அத்துடன் தாங்கள் இதுவரை காலமும் தங்கியிருந்த கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அப்பகுதி உதவி அரசாங்க அதிபரினால் மேலொப்பமிடப்பட்ட விடுவிப்புக் கடிதம் சமர்ப்பித்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ -3)

# பிரமந்தனாறு குளம் ரூ.60மில். செலவில் புனரமைப்பு

மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடனும் உலக வங்கியின் இலகு கடன் உதவியுடனும் கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பிரமந்தனாறு குளம் 60 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

இக்குளமானது யுத்தம் காரணமாக உரிய முறையில் பராமரிக் கப்படாது வாய்க்கால்கள் மற்றும் வடிகால்கள் சீரின்றி காணப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது. (ஸ்ரீ-3)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 25 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 110 |
| தக்காளி | 30 | 60 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 50 |
| கோவா | 30 | 60 |
| கரட் | 50 | 90 |
| பூசணி | 25 | 30 |
| புடோல் | 30 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 75 | 90 |
| பாகற்காய் | 80 | 100 |
| வெண்டிக்காய் | 45 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 110 |
| பயற்றங்காய் | 90 | 60 |
| லீக்ஸ் | 40 | 80 |
| பீற்றூட் | 30 | 30 |
| கறிமிளகாய் | 40 | 90 |
| முருங்கைக்காய் | 120 | 160 |
| போஞ்சி | 110 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 8-10 | 30 |
| தேசிக்காய் | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 40 |

# இராசி பலன்

*13.08.2011*
*(ஆடி 28, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு*
*பூரணை பின்னிரவு 12.41 மணிவரை*
*திருவோணம் முன்னிரவு 7.09 மணிவரை*
*இராகுகாலம் 9.05-10.35 மணிவரை*
*சுபநேரம் 3.05-4.35 மணிவரை*
*நல்லைக் கந்தன் மஞ்சம்,*
*பூரணை விரதம்*

**மேடம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும் நாள், தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரும், அந்நியர் உதவியுண்டு, உற்சாகமான நாள்.

**இடபம்** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், எதிர்ப்பாக இருந்த தொழில் கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்** நட்பு பகையாகாதிருக்க கவனம் தேவை, தொழில் வளர்ச்சியில் சிறு சிறு தடைகள் ஏற்படலாம், பயணத்தைத் தள்ளி வைக்க நினைப்பீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** எளிதில் உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், முன்னேற்றம் கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள்.

**சிங்கம்** நன்மைகள் நாடிவரும் நாள், அயல் நாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தேகாரோக்கியம் புத்துணர்வு பெறும் நாள்.

**கன்னி** எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள், எதிர்பார்த்த தனலாபம் இல்லம் தேடி வரலாம், பெரியோர்கள் உதவியுண்டு, சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**துலாம்** புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், தாய்வழி அனுகூலமுண்டு, எடுத்த முடிவில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், யோகமான நாள்.

**விருச்சிகம்** பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், பொருட் சேர்க்கையுண்டு, விருந்தினர் வருகையால் பூரிப்படையும் நாள், உறவினர் வழித் தொடர்புகள் முன்னேற்றமளிக்கும்.

**தனுசு** சுப செய்திகள் வந்து சேரும் நாள், புதிய தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், கடின வார்த்தைகளால் மனஸ்தாபமடையலாம், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**மகரம்** மன அமைதி கூட மகத்தான வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், திடீர்ப் பிரயாணங்கள் ஏற்படும் நிலையுண்டு, வியாபார நலன் கருதி புதிய நபர்களைச் சந்திக்கச் செல்வீர்கள்.

**கும்பம்** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், ஒரு வேலையை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், தொழிலில் பணியாளர்களை மாற்றும் எண்ணம் தோன்றும்.

**மீனம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், மாலையில் பிரபல்யமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.

வளவன்

## வாகன விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(கரவெட்டி)

சிறிய ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதுண்ட விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணிக்கு தொண்டைமானாறு கெருடாவில் கந்தசாமி கோவில் பகுதியில் இடம்பெற்றது.

இதில் கெருடாவில் தெற்கைச் சேர்ந்த குணத்துலிங்கம் ஜெயதாஸ் (வயது-37) என்ற குடும்பஸ்தரே காயமடைந்த நிலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார். (ஸ்ரீ-24)

## வீதி அகலிப்பு நடவடிக்கை

(அச்சுவேலி)

இருபாலை சந்தியிலிருந்து உப்புக்குளம் சந்தி வரையான கோண்டாவில் வீதியை அகலிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில் இரண்டு பக்கமும் தற்போது அமைந்துள்ள நிலையிலிருந்து 5 மீற்றர் அகலமுடையதாக அகலிப்பு செய்வதற்கு காணியுரிமையாளர்களிடம் சம்மதம் பெறும் நடவடிக்கையில் அப்பகுதி கிராம அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-70)

## இசை அர்ச்சனை ஒத்திகை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கார்த்திகை திருவிழாவை முன்னிட்டு ஆலய உள் வீதியில் இசை அர்ச்சனை நடைபெறவுள்ளது.

இவ் இசை அர்ச்சனை தொடர்பான ஒத்திகை நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறும்.

எனவே இசை அர்ச்சனை நிகழ்ச்சியில் பங்குபற்றவிருக்கும் கலைஞர்கள் ஒத்திகை நிகழ்ச்சியில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (ஸ்ரீ)

## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

ஈவினை அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆல்ய ஸ்ரீ கிருஸ்ண ஜெயந்தி பெருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் விநாயகப் பெருமானுக்கு விஷேட பூசைகள் இடம்பெற்று தொடர்ந்து 6 மணிக்கு கிருஷ்ண மூர்த்திக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று சுவாமி வீதி உலா வருவார்.

அத்தோடு தயிர் முட்டி உடைக்கும் பெருவிழாவும் இடம்பெறும். (ஸ்ரீ)

# வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறல்

## தடுத்து நிறுத்துமாறு மீனவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறி வடமராட்சி கிழக்கு பகுதியில் கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் அப்பகுதி மீனவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் சமாச தலைவர் எஸ்.ஸ்ரனிஸ்ஸாஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ,தென்பகுதியிலிருந்து வரும் மீனவர்கள் வடமராட்சி கிழக்கு கடலட்டை பிடிக்கும் தொழிலை மேற்கொள்கின்றனர்.

அது மட்டுமின்றி பெறுமதியான கடற்தொழில் உபகரணங்களையும் சேதப்படுத்தி விட்டு சென்று விடுகின்றனர்.

குறிப்பாக மீனவர்களின் வலைகளை தென்னிலங்கையிலிருந்து வரும் மீனவர்களின் படகுகளில் பொருத்தப்பட்டிருக்கும் வெளியிணைப்பு இயந்திரங்கள் சேதப்படுத்துவதாகவும் இதனால் இப்பகுதி மீனவர்கள் பரம்பரை பரம்பரையாக செய்து வரும் கரைவலைதொழிலானது முற்றாக தடை செய்யப்படுவதாகவும் தெரிவித்தனர்.

பல கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் அழிவடைந்த நிலையில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறலை கட்டுப்படுத்த வேண்டும் என அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதோடு வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் சமாசத்தின் ஊடாக யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்திற்கு அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# வெற்றிலைக்கேணியில் ப.நோ.கூ.சங்க கிளையை ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட வெற்றிலைக் கேணி (ஜே/432) கிராம சேவையாளர் பிரிவில் பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை இல்லாமையால் மக்கள் மிகுந்த நெருக்கடியை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,இந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உலர் உணவு நிவாரணப் பொருட்களை பெறுவதற்கு கூட இந்த கிராமத்திலிருந்து 2 மைல்களுக்கு அப்பால் உள்ள கட்டைக்காடு அல்லது ஆழியவளை பலநோக்கு கூட்டுறவு சங்க கிளைகளை நாட வேண்டியுள்ளது. இதனை விட இந்த பகுதி மக்கள் பெரும்பாலானவர்கள் மீன்பிடி வேலையை நம்பியுள்ளதால் இந்த மீன்பிடி வள்ளங்களை இயக்குவதற்கான எரிபொருட்கள் மற்றும் கருவாடு பதனிடுவதற்கான உப்பு மற்றும் ஏனைய நுகர்ச்சி பொருட்களைப் பெறுவதற்கு கூட பலமைல் தூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் இடம்பெயர்வுக்கு முன்னர் பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை ஒன்று இருந்ததாகவும் தற்போது இந்த கிளை இல்லாததால் இவ்வாறான பிரச்சினை ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இதனை கருத்தில் கொண்டு வெற்றிலை கேணி (ஜே/432) கிராமத்தில் விரைவாக பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவு தலைமைக் காரியாலத்திற்கும் இதனோடு தொடர்புடைய அதிகாரிகளுக்கும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஸ்ரீ-64)

# இலவச வைத்திய சேவை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் நடத்தும் இலவச வைத்திய சேவை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 முதல் 11.30 வரை சந்நிதி பொது நல்நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். போதனாவைத்தியசாலை பொது வைத்தியர் டாக்டர் பி.அச்சுதன், தோல் வைத்தியர் டாக்டர் திருமதி விநோதா ஆகியோர் வைத்திய சேவையை வழங்கவுள்ளனர்.

இவ் வைத்திய சேவையில் இலவச மருந்துகளும் வழங்க இருப்பதால் ஆலய சுற் றாடல், ஆலயப்பகுதி மக்கள் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (ஸ்ரீ)

❁ ❁ ❁ ❁ ❁

(யாழ்ப்பாணம்)

நல்லூர் றோட்டறக் கழகமும் நிறைவாழ்வு மையமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி பெரிய பரந்தனில் இடம்பெறவுள்ளது.

இங்கு இலவசமாக நோயாளிகளுக்கு மருந்துகள் வழங்கப்படுவதுடன் மருத்துவ பரிசோதனைகளும் மற்றும் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. (ஸ்ரீ)

## நூற்றாண்டுவிழா ஆலோசனைக் கூட்டம்

கோப்பாய் கோமான் அமரர் வன்னியசிங்கம் நூற்றாண்டு விழா ஆலோசனைக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நீர்வேலி வாழைக்குலைச்சங்கத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் கோப்பாய் கிளைத் தலைவர் சி.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வரவேற்புரையை வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் அ.த.க. கிருஷ்ணராசா, விளக்கவுரையை வலி.கிழக்கு பிரதேச சபை உபதலைவர் க.தர்மலிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர்.

அத்தோடு செயற்குழு தெரிவும் இடம்பெறும்.

இலங்கை தமிழரசு கட்சியின் மாவட்ட கிளைத் தலைவர், செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவர். அன்னாரின் அனுதாபிகள், ஆதரவாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குமாறு வேண்டப்படுகின்றது. (ஸ்ரீ)

யாழ்.செய்திகள்

## மஹோற்சவம்

(அச்சுவேலி)

ஆவரங்கால் கிழக்கு திருவருள்மிகு ஆலடி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

மறுநாள் புதன்கிழமை மாலை திருக்கல்யாணப்பூசையை தொடர்ந்து சுவாமி வீதிஉலா வருதலும் இடம்பெறும். (ஸ்ரீ-70)

## சமுர்த்தி நிவாரணம் விநியோகம்

(அச்சுவேலி)

ஜூலை- ஓகஸ்ட மாதங்களுக்களுக்கான சமுர்த்தி முத்திரை புள்ளிக்கான உணவு பொருள் விநியோகம் கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

உரிய பயனாளிகள் குறித்த தினத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட செயலக சமுர்த்தி பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-70)





யாழ்.மாநகரசபையை தூய்மை நகரமாக ஆக்குவதற்கான திட்டம் சம்பந்தமான கலந்துரையாடல் மாநகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா,வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் இதில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் விரைவில் திணைக்களங்களில் உள்வாங்கப்படுவர்

## பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா உறுதி

சமுர்த்தி அதிகாரசபையின் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் விரைவில் திணைக்களங்களில் உள்வாங்கப்பட்டு ஓய்வூதியத் திட்டத்திற்குள் சேர்க்கப்படுவார்கள் என்று சமுர்த்தி திட்டத்தின் பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர், சங்க நிர்வாக உறுப்பினர்கள், மாவட்ட மட்டத் தலைவர்கள் ஆகியோருடன் திணைக்களமாக்குதல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த 10 ஆம் திகதி கொழும்பு உலக வர்த்தக மைய கட்டடத்தில் அமைந்துள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சு காரியாலயத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இக் கலந்துரையாடலின் போது சமுர்த்தி உத்தியோகத்தர்களின் கோரிக்கைகளிற்கு பதிலளித்த அமைச்சர்,

அதிகார சபைகளை திணைக்களமாக்கும் போது பல பிரச்சினைகள் காரணமாக காலம் கடந்து சென்றுள்ளது. ஆனால் அடுத்த வாரமளவில் அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. அங்கீகாரம் கிடைத்ததும் விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவி உயர்வு எதுவுமில்லாது இருக்கின்றனர். அவர்கள் திணைக்களத்தினுள் உள்வாங்கப்பட்டதும் அவர்களின் சேவைக்கேற்ப பதவி உயர்வுகள் வழங்கப்படும். அத்துடன் நாட்டில் தரம் II இல் உள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விரைவில் மீண்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு பதவி உயர்த்தப்படுவார்கள்.

சம்பளபடியேற்றம் நிலுவைகள் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் முதற்கட்டமாக ஒரு சம்பளபடியேற்றத்தினை வழங்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பின்னர் மாவட்டச் செயலகங்களின் கோரிக்கைகளிற்கேற்ப மிகுதி நிதிகள் அனுப்பப்படும்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிற்குரிய பத்துமாத சம்பள கடன்கள் மற்றும் வீட்டுத்திட்ட கடன்களிற்காக 300 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது.

விரைவில் இக் கடன்கள் உரிய உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்படும். சகல சமுர்த்தி உத்தியோகத்தர்களும் மாவட்ட மட்டத்தில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். அதற்காக அமைச்சர் குழு ஒன்று மாவட்ட ரீதியாக சென்று மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கபிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடி இடமாற்ற சபை உருவாக்கப்படும். இதன்மூலமே எதிர்வரும் காலங்களில் இடமாற்றங்கள் நடைபெறவுள்ளது.

சமுர்த்தி வங்கிகளின் பணிக்குழுவினர்களின் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களின் இலாபப் பங்கீடு ஏற்றத்தாழ்வான விதத்தில் பங்கிடப்படுகின்றது. அப்பங்கீடு விகிதம் கடந்த 2008 ஆம் ஆண்டளவில் நிறுத்தப்பட்டு புதிய பங்குலாப விகிதம் நடைமுறைப்படுத்த புதிய சுற்று நிருபம் வெளியிடப்படவுள்ளது. அப்புதிய சுற்று நிருபத்தில் இக் குறைபாடு நீக்கப்படவுள்ளது. சமுர்த்தி உத்தியோகத்தர் கிராம சேவையாளர்களாக உள்வாங்க விசேட போட்டிப் பரீட்சை வைக்கப்படவுள்ளது. அதன் பிரகாரம் நாடளாவிய ரீதியில் இரண்டாயிரத்து இருநூறு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கிராம சேவையாளர்களாக இணைக்கப்படவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தின் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றி நாட்டின் யுத்த சூழ்நிலையால் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாமில் இருந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான திருமதி குகனேஸ்வரன் சுதர்சினியின் சேவைக்கால சம்பளம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைக்காக பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றிக் கொண்டிருக்கும் பட்டதாரிகள் மீது விசேட கவனம் செலுத்தி பதவி உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் திலகசிறி, அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்க தலைவர் சிசிர, செயலாளர் ஜெகத்குமார மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்க மாவட்டத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-2-246)

# நிர்வாக சபைக்கூட்டம்

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக கலை பண்பாட்டு பேரவையின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் நிர்வாக சபை உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கேட்டுக் கொள்கின்றார்.

(ஸ்ரீ-70)

# வாழைச்சேனைப் பகுதியில் தொடர்ந்து பதற்ற நிலை

மட்டக்களப்பிலுள்ள வாழைச்சேனைப் பகுதியில் பொலிஸாருக்கு எதிராக பொது மக்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நேற்று முன்தினம் நடத்தியுள்ளார்கள்.

அரசாங்க அலுவலகங்கள், கடைகள் உட்பட வர்த்தக நிலையங்கள் அனைத்தும் நேற்று மூடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

வாழைச்சேனைப் பகுதியில் பெண் ஒருவர் தாக்கப்பட்டதையடுத்து உருவான கலவரத்தில் பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது. வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தின் மீது கல்வீச்சுத் தாக்குதல் இடம்பெற்ற போது பொலிஸாரை சேர்ந்த நால்வரும் பொது மக்களில் மூவரும் காயமடைந்தனர்.

பொலிஸாரின் வாகனம் ஒன்றும் பயணிகள் பேருந்து ஒன்றும் இந்த மோதல்களின் போது சேதமடைந்தன.

பெண்களைத் துன்புறுத்தி வந்ததாகக் கூறப்படும் ஒருவரைப் பிடித்த பொதுமக்கள் அவரை பொலிஸாரிடம் கையளித்தனர். இருந்தபோதிலும் அவர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறியமையால் குறிப்பிட்ட நபரை தம்மிடம் மீண்டும் ஒப்படைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனைப் பொலிஸார் ஏற்க மறுத்ததையடுத்தே பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இன்றும் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் வாக்குவாதங்கள் இடம்பெற்ற அதேவேளையில் பெரும் பதற்ற நிலையும் காணப்பட்டது. மூடப்பட்ட கடைகளைத் திறக்குமாறு பொலிஸார் வலியுறுத்திய போதிலும் கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை.

(ஸ்ரீ-2)

# கிறிஸ் பூதங்கள் என்பது ஒரு கட்டுக்கதையே

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கிறிஸ் பூதங்கள் என்பது ஒரு கட்டுக்கதை என பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோன் கூறியுள்ளார்.

கொள்ளைச் சம்பவங்களிலும் பெண்களை பயமுறுத்துவதிலும் ஈடுபட்ட 47 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த போலி நபர்கள் காரணமாக மக்கள் அவர்களின் நாளாந்த நடவடிக்கைகளை இடையூறுக்கு உள்ளாக்கக்கூடாது. பலர் கொள்ளையடிப்பதற்காக கிறிஸ் பூதங்கள் அப் பகுதியில் நடமாடுவதாக கதைகளை பரப்பிவிடுகின்றனர் எனவும் நேற்று முன்தினம் பொலிஸ்மா அதிபர் கூறினார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பெரும்பாலும் அதேபகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

ஏறத்தாழ மேற்படி சந்தேக நபர்கள் அனைவரையும் கைது செய்தமைக்கு பொறுப்பான ஊவா மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர கூறுகையில்,

மக்கள் அனைத்து கொள்ளையர்களையும் கிறிஸ் பூதங்கள் என அழைப்பதை நிறுத்த வேண்டும் என்றார்.

அதேவேளை ஊவா மாகாணத்தில் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 16 வயது இளைஞன் ஒருவன் கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்து வைத்திருந்த அவ்விளைஞனின் விகார தோற்றம் கொண்ட புகைப்படமொன்றை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

(ஸ்ரீ-2)

# தமிழகம் செல்லும் இலங்கையர்களுக்கு

## பொலிஸ் நிலையத்தில் பதிவு

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு செல்லும் இலங்கையர்கள் பொலிஸ் நிலையத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று தமிழக பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்தியாவிற்குள் பிரவேசிக்கும் போதே பொலிஸாரிடம் தங்களது விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.


இலங்கை யாத்திரிகர்கள் மீது சென்னையில் தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்தே இந்த மேலதிக பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை யாத்திரிகர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

விமான நிலையங்களிலேயே தங்களை பதிவு செய்து கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்தியாவிற்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் வடிவேல் கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையர்கள் தங்களது பயண விபரங்களையும் தங்குமிட விபரங்களையும் பொலிஸாருக்கு வழங்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான தகவல்களை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு போதியளவு பாதுகாப்பை வழங்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகத்தில் கடந்த 7 ஆம் திகதி சிறுவர் மகிழ்களம் நாடக ஆற்றுகைப் பட்டறை நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்குபற்றிய சிறுவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைப் படத்தில் காணலாம்.


# ஏல விற்பனை

பனை அபிவிருத்திச் சபையின் பாவனையில் இருந்த பின்வரும் வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் வாகனங்களை அலுவலக நேரத்தில் 53, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சபையின் சந்தைப்படுத்தும் பகுதி அலுவலகத்தில் பார்வையிடலாம். இதற்குரிய கூறுவிலைகளை 20.08.2011 இற்கு முன் சபையின் தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.


01. முச்சக்கரவண்டிகள் (Auto) -02 202-9550, WPGI-4147
02. மோட்டார் சைக்கிள் (KB-125) -01 153-8661

பசுபதி சீவரத்தினம்
தலைவர்
பனை அபிவிருத்திச் சபை

தலைமையக முகவரி:
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4007)

## கமநலசேவை நிலைய கட்டடம் இன்னும் புனரமைக்கப்படவில்லை



(பூநகரி)

போர்க்கால நடவடிக்கையினால் முற்றாகக் சேதமடைந்து கூரையில்லாத நிலையில் காட்சியளிக்கும் பூநகரி கமநலச் சேவை நிலைய கட்டடத்தை புனரமைப்பதற்காக வடக்கின் வசந்தம் திட்டத்தில் பலமில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்டப்புனரமைப்பு ஒப்பந்த வேலையை வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் பொறுப்பேற்று கடந்த ஐந்து மாதகாலமாகியும் இவ்வேலை ஆரம்பிக்கப்படவில்லை என கமநல சேவை நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது கமநல சேவை நிலையம் வசதிகள் எதுவுமற்ற பசளைக்களஞ்சியத்தில் தற்காலிகமாக இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-84)

## தேசிய மட்ட போட்டிக்கு செல்லும் மாணவர்களுக்கு பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகளிலிருந்து தேசிய மட்டப் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட முதல் நான்கு இடங்களையும் பெற்ற 200 மெய்வல்லுநர் வீரர்களுக்கான நான்கு நாட்கள் கொண்ட வதிவிடப் பயிற்சி முகாம் எதிர்வரும் 17 அம் திகதி புதன்கிழமை தொடக்கம் 20 ஆம் திகதி வரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நடத்துவதற்கான ஒழுங்கினை வடமாகாண கல்வித்திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கொழும்பிலிருந்து வருகைதரும் தேசிய மட்டப்பயிற்றுவிப்பாளர்களும் எமது பிரதேசப் பயிற்றுவிப்பாளர்களும் இணைந்து இப்பயிற்சியினை வழங்கவுள்ளனர்.

இவ்வருடம் இக்காலப் பகுதியில் வடமாகாணத்திலிருந்து வலய ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட 50 உடற்கல்வி ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் சட்ட திட்டங்களும் பயிற்சிமுறைகளும் தொடர்பான பயிற்சி முகாமும் கொழும்பிலிருந்து வருகை தரும் பயிற்சி முகாமும் கொழும்பிலிருந்து வருகை தரும் பயிற்றுவிப்பாளர்களினால் நடத்தப் படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ச-8)

## கிளி. மாவட்டத்திலுள்ள 6 கிராமங்களில் அனர்த்த முகாமைத்துவ குழுக்கள்தெரிவு

கிளிநொச்சிமாவட்ட கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 6 கிராமங்களில் அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்கமைய தட்டுவன் கொட்டி, குமரபுரம், ஊரியான், உமையாள்பரம், கோரத்தன்கட்டு, பிரமந்தனாறு ஆகிய கிராமங்களிலேயே இக்குழு தெரிவு செய்யப்படவுள்ளது.


டிபிக்கோ நிறுவனத்தின் நிதியுதவியுடனும் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையுடனும் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 15 கிராம சேவையாளர் பிரிவிலும் அனர்த்த முகாமைத்துவக்குழு தெரிவு செய்வதற்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன்கிழமை கண்டாவளை பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்றபோதே மேற்குறித்த கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரினரால் நடத்தப்பட்ட மேற்படி கலந்துரையாடலில் கிராம சேவையாளர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அனர்த்தம் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டுதல்பற்றி தெரிவு செய்யப்படும் குழுக்களிடம் வலியுறுத்துமாறு கிராமசேவையாளர்களுக்கு கூறப்பட்டது. (ஸ்ரீ-3)

## கிழக்கில் கிறிஸ் மனிதன் விவகாரம் இயல்பு நிலையில் பெரும் பாதிப்பு

### அரியநேத்திரன் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் கிறிஸ் மர்ம மனிதன் தொடர்பாக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பீதியைப் போக்க இலங்கை அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நேற்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் விடுதலைப்புலிகள் காலத்தில் இது போன்ற சம்பவங்கள் ஏதும் நடந்திருந்தால் அந்தப் பழியும் விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்பட்டிருக்கும் என்றும் விடுதலைப்புலிகள் இல்லாத இந்தக் காலத்தில் மர்ம மனிதன் பின்னணியில் யார் யார் செயற்படுகின்றனர் என்பதைக் கண்டறியும் பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் அண்மைக்காலமாக கிறிஸ் மர்ம மனிதர்களின் நடமாட்டம் அதிகரித்த வண்ணமுள்ளதாகவும்

இதனால் மக்கள் மத்தியில் பெரும் பரபப்பும் பீதியும் ஏற்பட்டுள்ளன. இதன்காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உயர்தரப்பரீட்சைக்கு இக்காலப்பகுதியில் தோற்றும் மாணவர்களின் கல்வி நடவடிக்கையும் பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு,

கிழக்கு மாகாணத்தில் பல பிரதேசங்களிலும் மர்ம மனிதர்கள் நடமாடுகின்றனர் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சம்பவங்களால் கிழக்கு மாகாணத்தில் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் யார் யார் செயற்படுகின்றனர் என்பதைக் கண்டறிந்து மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பீதியைப் போக்க இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே, இந்த மர்ம மனிதன் தொடர்பாக அரசு கவனம் செலுத்தி முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்றார். (4-2)

## சக்விதி ரணசிங்கவிற்கு மீண்டும் விளக்கமறியல்

(கொழும்பு)

பாரிய நிதிமோசடி தொடர்பில் கைது செய்யப்பட்ட சக்விதி ரணசிங்க என்றழைக்கப்படும் அபய ரணசிங்க முதியன்சலாகே சந்த வீரகுமார எதிர்வரும் 26 ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் மீதான வழக்கு கங்கொடவில மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி எச்.எம்.ஆர். அநுரகுமார முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வழக்கு தினத்தில் எழுத்து மூல ஆவணங்களையும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றையும் சமர்ப்பிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளரின் வீட்டின் மீது துப்பாக்கிப் பிரயோகம்

தென்மாகாண சபை எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் நிலமே தென்னகோனின் அம்பலாந்தோட்டை மெதகம பகுதியிலுள்ள வீட்டின் மீது நேற்று அதிகாலை 2.45 அளவில் இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதல் இடம்பெற்ற போது மாகாணசபை உறுப்பினரும் அவரது தாயாரும் வீட்டில் இருந்துள்ளதாகவும் எனினும் எவ்வித பாதிப்பும் அவர்களுக்கு ஏற்படவில்லையெனவும் தெரியவருகிறது.

இந்த வீடு புதிதாக அமைக்கப்பட்டு வருவதால் வீட்டின் வரவேற்பறைக்குள் இலகுவாக பிரவேசிக்க சந்தர்ப்பம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் நவீன ரக வானொன்றில் தப்பிச் சென்றுள்ளனர். பொலிஸார் வீட்டினை சோதனையிட்ட போது 33 துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளனர்.

(ஸ்ரீ-2)

## யு.என்.ஹபிற்றெற் நிறுவனத்தால் மாந்தை கிழக்கில் 220 வீடுகள்

(முல்லைத்தீவு)

யு.என்.ஹபிற்றெற் நிறுவனத்தின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம மக்களுக்கு 220 வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளது என மாந்தை கிழக்கு பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நட்டாங்கண்டல், செல்வபுரம், பாளிநகர், கொள்ளைவிளாங்குளம், விநாயகபுரம், பூவரசங்குளம், பாண்டியன்குளம், கரும்புள்ளியான் ஆகிய கிராமங்களில் மீள்குடியேறியுள்ள குடும்பங்களுக்கே 5 இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இவ் வீடுகளை அமைப்பதற்கான ஆரம்பப் பணிகள் முடிவுற்று வரும் நிலையில் கட்டுமானப்பணிகள் துரிதகதியில் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-3)







துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/ பாலிநகர் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நவோதயா வார நிகழ்வுகள் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கல்விக்கண்காட்சி மண்டபத்தை துணுக்காய் கல்வி வலயக்கல்வி முகாமைத்துவப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் கு.விஜயபால நாடாவெட்டி திறந்து வைப்பதையும் கலைநிகழ்வில் பங்கேற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# யுத்தத்தின் போது சர்வதேசத்தின் நெறிமுறையை இலங்கை மீறவில்லை

## பாட்டலி சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தத்தின்போது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறையை இலங்கை மீறவில்லை என சகல வெளிநாட்டு நிபுணர்களும் நிரூபித்துள்ளனர் என்று மின்வலு மற்றும் மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

யுத்தம் தொடர்பான அறிக்கையை செப்டெம்பர் 21 ஆம் திகதிக்கு முன் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் சமர்ப்பிக்கும் படி அமெரிக்க இராஜாங்க திணைக்களம் கூறியுள்ளது என அவர் கூறினார்.

அமெரிக்க நாம் யுத்தக்குற்றம் இழைத்ததாக கூறுகிறது. ஆனால் அமெரிக்காவின் ஈராக் நடவடிக்கையின்போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக விக்கிலீக்ஸ் வெளியிட்ட ஈராக்கிய ஆவணங்கள் நிரூபித்துள்ளன என அமைச்சர் கூறினார்.

நோர்வே தாக்குதலைத் தொடர்ந்து தீவிர வலதுசாரிகளின் எழுச்சி காரணமாக மேற்கு நாடுகள் பெரிதும் அல்லல்படுகின்றன. திரில்லியன் கணக்கான கடன் வலையில் சிக்கியுள்ள அமெரிக்காவின் பொருளாதாரம் சரிந்து வருகின்ற நிலையில் அமெரிக்காவின் பொருளாதாரத் தடை மிரட்டல் நடைமுறைக்கு பொருந்தாது என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனவே தான் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின் எமது மக்கள் அனுபவிக்கும் அமைதியை சமாதானத்தை குழப்ப வேண்டாமென நாம் அமெரிக்காவை கேட்கின்றோம். நாம் விடுதலைப்புலிகளை ஒழித்ததன் மூலம் அமெரிக்காவும் நன்மையடைந்துள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (4-2)

# ஆரையம்பதி நரசிம்மர் ஆலய விக்கிரகம் உடைப்பு

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி கடற்கரை நரசிம்மர் ஆலயத்தின் நரசிம்மர் விக்கிரகம் கடந்த கடந்த புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி-ஆரையம்பதி எல்லைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மேற்படி ஆலயத்தின் விக்கிரகமே இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை ஆலயத்துக்கு பூசை செய்வதற்காக சென்ற பூசகர் ஆலய முன்றிலில் பூசைக்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்த விக்கிரகம் உடைக்கப்பட்டுள்ளது தொடர்பில் ஆலய நிர்வாக சபையினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸ்நிலையத்திலும் ஆலய நிர்வாக சபையினரால் முறையிடப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவில் இருந்து வருகை தந்த சிற்பிகளால் செதுக்கப்பட்ட குறித்த விக்கிரகம் உடைக்கப்பட்டுள்ளது தொடர்பில் இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு மாடு வெட்டப்பட்டு மேற்படி ஆலய மூலஸ்தானத்துக்குள் வீசப்பட்டிருந்ததையடுத்து அதற்கெதிராக பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதுடன் அதனை சிலர் இன வன்முறையாகவும் மாற்ற முற்பட்டிருந்த நிலையில் அவை முடக்கப்பட்டன.

இந்த நிலையில் மீண்டும் இவ்வாறான நாசகாரநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையானது அமைதியாகவுள்ள மக்களினை குழப்பும் நடவடிக்கையாக கருதுவதாக இங்கு வருகைதந்த கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளருமான பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கையெடுத்து உடனடியாக சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு காத்தான் குடி பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (4-2)

# மர்ம மனிதனின் தாக்குதலிலிருந்து மயிரிழையில் தப்பித்த இளம் பெண்

## திருமலையில் சம்பவம்

திருகோணமலை சங்கமம் கிராமத்தில் மர்ம மனிதனின் தாக்குதலில் இளம் பெண்ணொருவர் மயிரிழையில் தப்பியுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 10 ஆம் திகதி இரவு 7.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

தம்பலகாமம் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் டபிள்யு.பி.நிதிசானி (வயது 21) என்ற இளம் பெண்ணே தாக்குதலில் இருந்து தப்பியவர் ஆவார்.

சங்கமம் கிராமத்திலுள்ள தனது வீட்டிற்கு வேலை முடிந்து கணேஸ் வீதி வழியாக இந்த யுவதி சென்று கொண்டிருந்த போதே சிவப்பு நிற மோட்டார் சைக்கிளில் வந்த நபர் யுவதியை மறித்து தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளார்.

யுவதியை பிடித்த மர்ம மனிதன் தன் வசமிருந்த கத்தியை எடுத்து தாக்குதல் நடத்த முயற்சித்த போது யுவதி கூச்சலிட்டு கத்தியுள்ளார். இதனையடுத்து அயலில் நின்றவர்கள் ஒன்று கூடியதையடுத்து மர்ம மனிதன் மோட்டார் சைக்கிளில் தப்பியோடியுள்ளான்.

இச் சம்பவம் தொடர்பில் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. தனக்கு நேர்ந்த ஆபத்து குறித்து நிதிசாஷினி விபரிக்கையில்,

எனது சொந்த இடம் குருநாகல் ஆகும். தொழில் காரணமாக இங்கு வந்து தங்கியுள்ளேன். மாலை 5.45 மணியளவில் வேலைமுடித்து பஸ்ஸில் வந்து கணேஸ் வீதியில் இறங்கி சங்கமம் கிராமத்தில் உள்ள வீட்டுக்கு சென்று கொண்டிருந்தேன்.

கணேஸ் வீதி பள்ளிக்கு முன்பாக உள்ள வீதியில் நான் வரும் போது சிவப்பு நிற மோட்டர் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் திடீரென்று எனக்கு முன் வந்து என்னை மறித்து எனது இடது பக்க மார்பகத்தை பிடித்தார்.

அதே நேரம் பையிலிருந்த எதனையோ எடுக்க முயன்றவேளை நான் கூச்சலிட்டு கத்தினேன். இதனையடுத்து குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் திருகோணமலை பக்கமாக தப்பிச் சென்று விட்டார்.

எனக்கு இரு நகக்கீறல் காயம் மட்டுமே ஏற்பட்டன. வந்த நபர் சிவப்பு தலைக்கவசத்தையும் அணிந்திருந்தார்.

அவர் தப்பியோடும் போது கத்தியொன்றின் உறையையும் கைவிட்டு சென்று விட்டார். இதனையடுத்து பொலிசுக்கு தகவல் தெரிவித்தோம். பின்னர் பொலிஸார் வராததால் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறையிட்டோம் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)


சிவமயம்

தில்லைக்கூத்தன் திருவடிதுணை

**காரைநகர் கார்த்திகேயப்புலவர் யாத்த**

**திண்ணபுர அந்தாதி**



**நூல்வெளியீட்டு விழா**



இடம் :- நல்லூர் சிவன் தேவஸ்தானம்

காலம் :- 13.08.2011 சனிக்கிழமை

தலைவர் :- பேராசிரியர் இலக்கிய கலாநிதி பிரம்மஸ்ரீ கோபாலகிருஷ்ண ஐயர் (வாழ்நாள் பேராசிரியர்)

பிரதம விருந்தினர்:- பேராசிரியர் இ.குமாரவடிவேல் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**நிகழ்ச்சிகள்**

3.30: மங்கல விளக்கேற்றல்

3.35: திருமுறை ஓதல்

3.45: ஆசியுரை — ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் (யாழ். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்); கலாநிதி க.வைத்தீஸ்வரக் குருக்கள்

3.50: வரவேற்புரை — க.கு.க.சிவபாலன்

4.00: தலைமையுரை — தலைவர்

4.10: வெளியீட்டுரை — பேராசிரியர் இ.குமாரவடிவேல் (யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

4.20: முதற்பிரதி வழங்கல் — பிரதமவிருந்தினர்

4.21: முதற்பிரதி பெறுபவர் — லயன் E.S.P.நாகரட்ணம் (கல்விக்காருண்யன், மனித நேய ஈகையாளன், பொன் மனச் செம்மல்)

4.30: சிறப்புப்பிரதிகள் வழங்கல்

4.35: பாராட்டுரை — ஆறு. திருமுருகன் (தலைவர் துர்க்கையம்மன் தேவஸ்தானம், தெல்லிப்பளை)

4.40: கௌரவிப்பு — கார்த்திகேயப்புலவரின் பீட்டன் மகேசசர்மா தேவேஸ்வரசர்மா

4.45: புராணபடனமும் உரையும் — படனம்: கவிஞர் இராசையா குகதாசன்; விரிவுரை: வ.பேரின்பநாயகம் (தலைவர் அகில இலங்கைத் திருமுறைமன்றம்)

4.55: சிறப்புரை — அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன்

5.05: பதிலுரை — கவிஞர் இராசையா குகதாசன்

5.10 நன்றியுரை — பண்டிதர் சு.வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்)

5.15: திருமுறை ஓதலுடன் விழா இனிதே நிறைவுறும்.

விழா அமைப்பாளர்
அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார்
க.கு.க.சிவபாலன்

விழாக்குழு சார்பில்
கலாநிதி க.வைத்தீஸ்வரக்குருக்கள்

(சி-4012)



**Dulux**



AkzoNobel

கட்டடப்பொருட்கள், மிற்சுயி நிப்போன் சீமெந்து, Akzonobel பெயின்ற் வகைகள் ( எமர்சன், எனமல், நிக்கோல், டியூகோ), நஷனல் பீ.வி.சி (National PVC) குழாய்கள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

**கஜமுகன் ஹாட்வெயர்**

147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 021 222 2833



**Hatton National Bank**

Two Decades of Microfinance in Sri Lanka

**அடகுப் பொருட்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, சாவகச்சேரி, பருத்தித்துறை, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.06.2010 இற்கு முன்னர் அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 20.08.2011 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்.....

- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா. 500) செலுத்தி

அல்லது

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**ஹற்றன் நஷனல் வங்கி** HNB

(சி-4013)

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

# நல்லூர் ஆலய சூழலில்...

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை யொட்டி தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசா[illegible]ன் நடத்தும் தெய்வீக இசையரங்கில் 10 ஆவது நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பொன்.ஸ்ரீவாமதேவன் வழங்கும் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள் ளது. இதில் வயலின் - கே.குகபரன், மிருதங்கம்- எஸ். துரைராசா, முகர்சிங்- எஸ். செந் தூரன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்கேற்கவுள்ளனர்.

* * * * *

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்று வரும் கம்பராமாயணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா ஸ்ரீராம அவதாரம் பற்றி இசைப் பேருரை நிகழ்த்துவார்.

* * * * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் நடத்தும் சமயச் சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் மாலை 3 மணி முதல் 6 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இதில் 10 ஆம் திருவிழாவான இன்றைய நிகழ்வின் **கலியுகத்தில் கண் கண்ட தெய்வம்** முருகன் பற்றி காரை எம்.பி. அருளானந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

அத்தோடு புஸ்பமலர் யோகநாதனின் நெறியாள்கையில் விசேட இசைக்கச்சேரியும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து வடலியடைப்பு இந்து இளைஞர் சங்க அறநெறிப் பாடசாலை தொல்புரம் ஆதி முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வும் இடம்பெறும்.

* * * * *

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ காலத்தில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் சமய சொற்பொழிவும் கலை நிகழ்வும் மாலை 6 மணி முதல் 7 மணிவரை நல்லை ஆதீன திருஞான சம்பந்தர் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இன்றைய நிகழ்வில் செல்வி நவரட்ணம் தனசொரூபியின் **தெய்வீக கானம்** இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ)

## யாழ்.-கிளிநொச்சியில் வாழும் சகலரும் வாக்காளர் பதிவினை மேற்கொள்ளவும்

# பவ்ரல் அமைப்பு வேண்டுகோள்

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட் டங்களில் வாழும் சகல வாக்காளர்களும் தவறாது தங்களது வாக்காளர் விண்ணப் பப்படிவங்களை நிரப்ப வேண்டும் என்று பவ்ரல் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்விரு மாவட்டங்களையும் சேர்ந்த வாக்காளர்கள் தங்கள் வாக்காளர் விண் ணப்பப் படிவங்களையும் தவறாது நிரப்பு வதற்கு அங்கு செயற்படும் அரசியல் கட்சி களின் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

இது தொடர்பாக அமைப்பின் நிறைவேற் றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி குறிப்பிடுகையில், தற்போது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வாக் காளர் விண்ணப்பப் படிவங்களை நிரப்பும் பணி இடம்[illegible]று வருகின்றது. இந்த சந்தர்ப் பத்தில் அங்கு வாழும் சகல வாக்காளர்களும் தவறாது வாக்காளர் விண்ணப்பப் படிவங் களை நிரப்ப வேண்டும்.

சுமார் பத்தாயிரம் வாக்காளர்களின் எண் ணிக்கை 2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் அதிகரிக்கும் போது யாழ். குடா நாட்டுக்கான எம்.பி.களின் எண்ணிக்கை ஒன்றால் அதிகரிக்கும்.

யாழ். குடாநாட்டில் 2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பதிவாகியுள்ள வாக் காளர்களின் எண்ணிக்கை குறைந்ததால் எம்.பி.களின் எண்ணிக்கையும் குறைவடை ந்துள்ளது. இந்த நிலைமையை கருத்தில் கொண்டு செயற்படுமாறும் அவர் வாக்காளர் களை கேட்டுக்கொண்டுள்ளார். (4-2)

## அனோமாவை நாகரசபைத் தேர்தலில் களம் இறக்குவது குறித்து தீர்மானிக்கப்படவில்லை

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு




(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் மாலை வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை சந்தித்துள்ளார். எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரம சிங்கவுடன் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்கவும் வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றிருந்தார். சரத் பொன்சேகாவுடனான சந்திப்பை அடுத்து கருத்து வெளியிட்ட திஸ்ஸ அத்த நாயக்க, முன்னாள் இராணுவ தளபதியின் நலன் விசாரிப்பதற்காகவே சிறைச்சாலை க்குச் சென்ற தாகவும் அங்கு எவ்வித அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக பேசப்படவில்லை எனவும் கூறி னார்.

அனோமா பொன்சேகா கொழும்பு மாநகர சபைக்காக ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிடுகின்றாரா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதிலளித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி அத்தகைய தீர்மானத்தை எடுக்கவில்லை என குறிபிட்ட அவர் வேட்பு மன குழு எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு பின்னர் கூடி வேட்பாளர்கள் தொடர்வில் ஆராயும் எனவும் கூறினார். (4-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று மஞ்சத் திருவிழா




## மஞ்சத்தில் இன்று மால்மருகன் உலா

அஞ்சிநாம் அல்லலுற்று அழுதநாளில்
அடியாரைக் காத்தாண்ட ஆறுமுகா
நெஞ்சத்தில் நல்லூர் முருகாவுனை
நினைத்து நாள்தோறும் வணங்கிடுவோம்
மஞ்சத்திலின்று மால்மருள உன்திருஉலா
மனத்திற்கு அமைதி தந்திடுதே

*திருமதி எஸ்.பாக்கியநாதன்,*
*வவுனியா.*

## அகங் குழைந்து நிற்போம்

வண்ணவொளி வீசிநிற்கும் மஞ்சமதன் மேலே
எண்ணமெல்லாம் கொள்ளை கொள்ளும் வேலனைக் கண்டே
பண்ணுடனே திருமுறைகள் பாடியே பின்வருவார்
கண்நிறைந்த காட்சிகண்டு அகங்குழைந்து நிற்போம்

*கவிமணி கந்தமுருகேசதாசனார்.*

## மயிலாசன நாயகனே...

மஞ்சந்தனில் வந்து பக்தர் நெஞ்சந்தனில் உறைந்து
பஞ்சம் தனை தீர்க்கும் மயிலாசன நாயகனே
தஞ்சமென வருவோர்க்கு முன்வந்து அருள்புரிவாய்
நல்லை நகர் குமரனே நின்பாதம் குமரனே
நின்பாதம் போற்றி போற்றி

*மகேந்திரலிங்கம்-நிரோஷனா,*
*கோப்பாய் தெற்கு.*

## எம் மக்கள் துயர் தீர்த்திடு முருகா

குஞ்சரியர் சகிதம் இன்று திருமஞ்சத்திலே பவனிவரும்
எட்டுத் திக்கும் புகழ்பரப்பி நிற்கும்-முருகா
சித்தர்கள் வாழ்ந்து முத்தி பெற்ற நல்லைநகர் வீதியிலே
தன்னை நாடி ஓடிவரும் பக்தர்கள் குறைதீர்க்கும்-வேலா
தந்தைக்கு உபதேசம் செய்து கோபத்துடன்
பழனியிலே கச்சையுடன் தனியநின்ற-கந்தா
இனியாவது எம்மக்கள் துயர் தீர்த்திட
பாதிமனமுருகி எழுந்தோடி வாராயோ-கடம்பா

*க.கனகசபை,*
*சண்டிலிப்பாய்.*



நல்லூர்க் கந்தனின் அருட்கடாட்சம்
அனைவருக்கும்
கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்!

இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்

துவிச்சக்கர வண்டிகள், அதன் உதிரிப் பாகங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், டிஸ் அன்ரனா வகைகள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்

இல.52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/4005)

# மற்றொரு கோணம்



## உங்கள் உள்தன்மையில் ஒருமுழுமை பெறுவதே உங்கள்வெற்றி

ஆன்மீகம் 09

...பெரும்பாலானவர்கள் இன்பத்தை ஆனந்தம் எனத் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். நீங்கள் இன்பத்தை எப்பொழுதும் தக்க வைத்துக் கொள்ள முடியாது. அது பற்றாக்குறையாகவே எப்போதும் இருக்கும். ஆனால், ஆனந்தம் என்பது எதையும் சார்ந்து இருப்பதில்லை. இன்பம் என்பது எதையோ அல்லது யாரையோ சார்ந்து இருப்பது. ஆனந்தம் என்பது எதையும் சார்ந்து இருப்பது அல்ல. உங்கள் சொந்தத்தன்மை அது. ஆனந்தத்திற்கு உண்மையில் வெளியிலிருந்து எந்தவிதமான தூண்டுதலும் தேவையில்லை.

நீங்கள் ஆனந்தத்துடன் இருந்தால் அதுதான் முழுமை என்பது. மேலும் ஆனந்தம் என்பது எங்கோ வெளியிலிருந்து சம்பாதித்ததல்ல. உங்களுக்குள்ளேயே மிக ஆழமாகச் சென்று, கண்டு கொள்வது. அது ஒரு கிணறு தோண்டுவது போன்றது. மழை பெய்யும் பொழுது மழைத் துளிகளுக்காக நீங்கள் வாய்திறந்து காத்திருந்தால் சில துளிகள் செல்லக் கூடும். ஆனால், உங்கள் தாகத்தைத் தணிப்பதற்காக மழை நீருக்கு வாய் திறந்து இருப்பது ஒரு விரக்தியான மனநிலையை அளிக்கும். மழை எப்போதும் தொடர்ந்து பெய்து கொண்டிருக்கப் போவதுமில்லை. ஒரு மணி நேரமோ இரண்டு மணி நேரமோ பெய்து விட்டு நின்று விடும். அவ்வளவு தான். அதனால்தான் வருடம் முழுவதும் நீர் கிடைக்கின்ற மாதிரி உங்களுக்குச் சொந்தமாக ஒரு கிணறு தோண்டிக் கொள்ளுங்கள். நீங்கள் உண்மையான ஆனந்தம் எனக் குறிப்பிடுவது எல்லாம் இது தான். நீங்களே உங்கள் சொந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்கிறீர்கள். அது உங்களுக்கு எப்பொழுதும் தண்ணீர் கொடுத்துக் கொண்டே இருக்கும். மழை பெய்யும் பொழுது நீருக்கு வாய் திறந்து இருப்பது போல இல்லை இது. எப்போதும் தண்ணீரை உங்களிடம் வைத்து இருக்கிறீர்கள். அதுதான் ஆனந்தம்.


வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் மரணத்தை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டதுண்டா?

வாழ்க்கையில் வெற்றி பெற்றிருந்தால் கட்டாயமாக மரணத்தை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளமுடியும். ஆனால் வாழ்க்கையின் வெற்றி என்று நீங்கள் எதை நினைக்கிறீர்கள்? உங்கள் தொழிலிலேயோ, உங்கள் வேலையிலேயோ, உங்கள் வணிகத்திலேயோ வெற்றி பெற்று இருக்கலாம். ஆனால் அவையெல்லாம் வாழ்க்கையில் வெற்றி பெற்றதாக ஆகாது. அதனால்தான் மரணம் வரும் போது "இன்னும் முடியவே இல்லையே, அதற்குள் மரணம் வந்து விட்டதே "என்று கஷ்டப்படுகிறார்கள். வாழ்க்கையிலேயே வெற்றி பெற்று இருந்தால் மரணத்தை சுலபமாக ஏற்றுக் கொள்ள முடியும்.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதென்றால் என்ன என்பதை நாம் வரையறை செய்ய வேண்டும். பணம் சம்பாதித்தால் வெற்றி என்கிறீர்கள். நான்கு பேர் மதிக்கும் படி வாழ்ந்தால் வெற்றி என்று நினைக்கிறீர்கள். அது வல்ல வெற்றி. எப்போது உங்கள் உள் தன்மையில் ஒரு முழுமை வருகின்றதோ, எப்போது வெளியே நடக்குகிற சம்பவங்களால் உள் தன்மையில் எந்தப் பாதிப்பும் இல்லாத நிலை ஏற்படுகின்றதோ, அதுதான் வெற்றி. அப்படியொரு வெற்றி வந்துவிட்டால்அந்த மனிதனுக்கு மரணம் என்பது ஒரு விடயமே இல்லை.

ஏழை, பணக்காரன்,நோயாளி, ஆரோக்கியன், முட்டாள், அறிஞன், கருப்பன், சிகப்பன், இப்படிப்பட்ட சமுதாய ஏற்றத்தாழ்வுகளுக்கு, முன் ஜென்மத்தில் நாம் செய்த பாவ புண்ணியம்தான் காரணமா?

பாவம், புண்ணியம் இவற்றை உருவாக்கியது யார்? பாவம், புண்ணியம் இவை ஒவ்வொரு சமூகத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. ஒரு நாட்டில் ஒருசமூகத்தில் நல்ல செயலாகக் கருதப்படுகின்றது அல்லது வேறொரு சமூகத்தில் நல்லசெயலாக கருதப்படுவது இங்கே பாவமாககக் கருதப்படுகின்றது. ஏனென்றால் பாவம், புண்ணியம் என்பவை மதங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டால்தான், பாவம், புண்ணியம் இவையெல்லாம் மனதின் குற்றங்கள் உருவாகாமல் நல்ல மனிதனாக வாழ



வகை செய்யும் என்பதனால் தான் உருவாக்கப்பட்டன. மதங்களை வளர்ப்பதாகச் சொல்பவர்களுக்கு மனிதனிடம் உள்ள தெய்வீகத்தைப் பற்றிய நம்பிக்கை இல்லாதது போலத்தெரிகிறது. அவர்கள் எப்போதுமே மனிதனைக் கடவுள்தான் படைத்தார் என்கிறார்கள்.

ஆனால் அதே நேரத்தில் மனிதத் தன்மை பற்றிய நம்பிக்கையில்லாமல் இருக்கிறார்கள். (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இணையத்தில் தமிழ் இதழ்கள்

03

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

அரிமா. பொறிஞர்.க. பட்டாபிராமன்

தமிழ்நாடு

வடஅமெரிக்கத் தமிழர்களுக்காக சி.கே. வெங்கட்ராமன் என்பவரால் ஆறாம் திணை நிறுவனத்துடன் 2001 இல் "தென்றல்" என்ற மின் இதழ் தொடங்கப்பட்டது. இவற்றுள் தமிழர்களின் உணர்வுகள், அவர்களின் வாழ்க்கைத் தரம் தொடர்பான நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. அமெரிக்காவிலுள்ள நியுஜெர்சி மாகாணத்தில் ஜனவரி 2001-2002 இல் "தமிழ் ஓவியம்" என்ற மின் இதழ் தொடங்கப்பட்டது. இதில் அனைத்து வகையான இலக்கிய நிகழ்ச்சிகள் கட்டுரைகள் வெளி வருகின்றன.

2003 ஏப்பரில் முதல் "திசைகள்" என்னும் மின் இதழ் வெளிவருகிறது. ஒருங்குறியில் (Uncode) அமைந்த முதல் தமிழ் மின் இதழ் இதுவே ஆகும். உலகம் முழுவதும் உள்ள தமிழ் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், படைப்பாளர்கள் எனப் பங்கேற்பது இவ்விதழின் சிறப்பம்சம் ஆகும்.

2004 இல் பேராசிரியர் முனைவர் தி.நெடுஞ்செழியன் என்பவர் தமிழாய்வு இணைய இதழ் என்பதை தஞ்சை மாவட்டம் மயிலாடு துறையில் செயல்படுத்தினர். இதுவே முதல் தமிழாய்வு மின்இதழ் ஆகும் (WWW.tamilthinai.com).

இந்த இணையத்தளம் பல பல்கலைக்கழக ஆய்வியல் மற்றும் முனைவர்ப்பட்ட ஆய்வேடுகளை தொகுத்து வெளியிடுகின்றது. இதனால், பல மாணவர்களுக்கு ஆராய்ச்சி செய்ய பேருதவியாக இத்தளம் பயன்படுத்தப்படுகின்றது.

1.6.2006 இல் மதுரை தேனியிலிருந்து திரு. எம். சுப்பிரமணி என்பவர் முத்துக்கமலம் (WWW.muthukamalam.com) என்ற மின் இதழை தொடங்கியுள்ளார் இதில் இலக்கியம், குழந்தைகள் இலக்கியம் எனப்பொதுச் செய்திகளை தாங்கி வெளியிட்டு வருகினற்றார்.

இவையெல்லாம் பாரிஸ் வாழ் தமிழர் திரு.வாசுதேவன் என்பவர் எக்லீவ் (WWW.exilivre. com) என்னும் மின் இதழை நடத்தி வருகிறார். இது ஒரு புகலிடத் தமிழக ஊடக இலக்கிய அறிவியல் மின் இதழ் ஆகும். முகப்புப் பகுதியில் ஐரோப்பாவின் மூத்த குடிகள், கட்டுரை, பயண அனுபவ வெளியீடுகள் போன்றவை இடம்பெற்றுள்ளன. அயல் நாட்டுக் கவிஞர்களின் மொழி பெயர்ப்புக் கவிதைகள், அரசியல் போர் குறித்த கருத்து விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழீழம் (WWW.tamil eelam. com) என்னும் இதழ் இலங்கைத் தமிழர்கள் நடத்தும் மின் இதழ் ஆகும். தமிழீழ விடுதலை பற்றிய பல்வேறு அரசியல் சார்புக் கட்டுரைகளும் புகைப்படங்களும் காணப்படுகின்றன. இலங்கைத்தமிழர்களின் படைப்புக்கள் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

1995 இல் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த திரு. பாலாபிள்ளை என்பவர் உலகத்தமிழ் மக்களை ஒன்று சேர்ப்பதற்கான தமிழ் நெற் (Tamil.net) என்ற மின் இதழை இணையத்தில் தோற்றுவித்தார். 1997 இல் சிங்கப்பூரைச் சேர்ந்த பேராசிரியர் நா. கோவிந்தசாமி என்பவர் கணியன் என்ற மின் இதழை தொடங்கினார். இவரே தமிழ் இணையத்தின் தந்தை என உலகத் தமிழ் மக்களால் போற்றப்படுகிறார்.

1998 ஆம் ஆண்டு ஏப்ரல் நான்காம் நாள் உலகத்தமிழர்களை ஊக்குவிக்கும் (International Tamil Motivational Movement) என்ற இயக்கமே "இன்தாம்" என்ற மின்இதழ் தொடங்கியது. இதன் தலைமை அலுவலகம் சென்னையில் இருக்கிறது. இதன் முதன்மை அலுவலகம் மலேசியத் தலைநகர் கோலாலம் பூரில் அமைக்கப்பட்டுள்ளது. இன்று உலகில் எண்பது நாடுகளில் ஒருமாதத்திற்கு இருபது இலட்சம்பேர் பார்வையிடுகின்றனர். WWW.intamm.com என்பது இதன்முகவரி ஆகும். இன்தாம் பல்வேறு இதழ்களை இணைத்து நடத்துகிறது.

விண்ணோசை, ஒளிஓவியம், பனித்துளி, இலக்கிய சாளரம், கவின், மனிதநேயம், தமிழ்க்கம்பியூற்றர், வளர்தொழில் வேளாண்மை, புதியகல்வி, மருத்துவ அறிவியல் மலர்,மூலிகை மணி, ஏற்றுமதி உலகம், மியூசிக் வேல்ட், சென்னைச்சுவடிகள், சுவடி, சரிகமபதநி எனப் பதினேழு இணைய இதழ்களை நடத்துகின்றது.

1998 இறுதியிலிருந்து "ஆறாந் திணை என்ற இணைய இதழ் தொடங்கி இணையத்தில் வெளி வருகின்றது. மின் இதழ்களின் அழகான வடிவமைப்பிற்கு முதல் இடம் பெற்று வருகின்றது. குழந்தை இலக்கியம் திட்டிவாசல், நிகழ்வுகள் சிறப்பிதழ்கள் என பிற இதழ்களும் இதன் கீழ்நடத்தப்படுகின்றன.

திரை உலகினருக்கென்று தொடக்கப்பட்ட இணையத்தளம் "தமிழ் சினிமா" என்னும் மின் இதழாகும். இவ்விதழ் 1997 முதல் இயங்கி வருகிறது. திரையுலகம் பற்றிய செய்திகள், சினிமாவரலாறு, சாதனைப்பக்கம், பிறந்த நாள் வாழ்த்து போன்ற பகுதிகளை உள்ளடக்கி வெளிவருகின்றது. தமிழ் சினிமா இதழ் தமிழ்புத்தகக் கடை, தமிழச்சி ஆகிய பிற இதழ்களையும் நடத்துகிறது.

(தொடரும்)

# சுய வருமானத்தை ஈட்டித்தரும் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை

15-V



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வீட்டுத்தோட்டம் எனும் போது இது என்னவோ ஒரு அற்ப விடயமாகவும் இதற்கு எதற்காக இவ்வளவு பீடிகை எனவும் எண்ணத் தோன்றுகின்றதல்லவா! ஆனால், இதற்குள்ளே எமது வாழ்க்கைக்குத் தேவையான பல விடயங்கள் உட்பொதிந்திருப்பதனை எம்மால் அறியவோ உணரவோ முடிவதில்லை.

வீட்டுத்தோட்டம் என்பது ஒரு கலை. வீட்டைச்சுற்றி இருக்கின்ற நிலப்பரப்பில், இடத்தில் பல பயிர்களும் வளரும். தோட்டமொன்றை திட்டமிட்டு உருவாக்குதலாகும். இங்கே திட்டமிடலில் குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே பங்குபற்றுதல் நல்லது. நல்லதொரு புரிந்துணர்வை உருவாக்குவதற்கான சந்தர்ப்பமொன்றை இதன்மூலம் ஏற்படுத்திக் கொள்ள முடியும். வீட்டிலுள்ள பாடசாலை செல்லும் இளையோரை இதனுள் உள்வாங்கி அவர்களிணைந்து திட்டமிட்டு உருவாக்கும் வீட்டுத்தோட்டத்திற்கு முன்னுரிமை கொடுப்பது நல்லது. வீணாக வெட்டிப் பேச்சு பேசி நேரத்தை வீணாக்குவதை விடுத்து இளையவர்களின் எண்ணத்திற்கு முன்னுரிமை கொடுத்து இன்னும் அவர்களைத் தட்டிக் கொடுத்து அழகாகவும் பிரயோசனமுள்ளதாகவும் வீட்டுத்தோட்டத்தை எளிமையானதாக அமைத்திட முடியும்.

வீட்டுத்தோட்டம் பலவகைப் பயிர்களைக் கொண்ட சிறிய நிலப்பரப்பிலமைந்த உற்பத்தி செய்யுமொரு அமைப்பு மட்டுமல்ல. இதனூடாக தினந்தினம் மனதைக் குளிர்விக்கும் பசுமையை கண்ணாரக்கண்டு மனம் நிறைய மகிழ்ந்து அனுபவிக்கலாம். மனதிற்கு இரம்மியமான காட்சியைக் காண்பதன் மூலம் ஆறுதலளிப்பதாகவும் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் உளத்தாக்கத்திலிருந்து விடுபடவும் வீட்டுத்தோட்டம் பெரிதும் உதவும். பல ஆண்டுகளாக சிக்குண்ட போர் நிகழ்வுகளிலிருந்தும் குறிப்பாக மன அழுத்தத்திலிருந்தும் விடுபட இதுவொரு நல்ல செயல். குடும்பங்களிடையே ஏற்படும் சக்கரவுகளுக்கு இயன்றதொரு தீர்வு கண்டிட வழிகள் பலவுண்டு. வீட்டுத் தோட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு தேவையான இலைக்கறி வகைகள், பழங்கள், மரக்கறி வகைகள் இவற்றுடன் மருத்துவ மூலிகைகள் என பலவும் பெற வாய்ப்புள்ளதுடன் வீட்டிலே சேரும் சேதன கழிவுகளை மீள்சுழற்சி செய்து கூட்டுரமாக்கி மீளவும் பயிர்களை வளர்ப்பதற்கு பயன்படுத்த முடியும். கழிவென்றாலும் அது அவரவர் வீட்டுச் சொத்து. மதிப்புள்ள எதனையுமே ஒரு துரும்பென்றாலுங் கூட பிறருக்கு கொடுக்க விரும்பாத நாங்கள் வீட்டு கழிவுகளை மட்டும் *சொப்பிங்* பைகளில் நிரப்பி தெருவில் வீசிவிடுவது எந்தளவிற்கு நியாயமானதாகும்? அவரவர் வீட்டு சமையலறைக் கழிவு, வீட்டைப் பெருக்கும் போது வரும் குப்பை கூழங்கள் என இவற்றை உக்க வைத்து வீட்டுத் தோட்டத்தில் பயன்படுத்த முடியும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



இவையனைத்திற்கும் மேலாக ஒரு ரம்மியமான சூழலை எமது வீட்டில் நாமே உருவாக்கிக் கொள்ளலாம். இயந்திர வாழ்க்கைக்குள் சிறைப்பட்டுப் போகும் எங்களுக்கு மனதிற்கு புத்துணர்வு தரும் காட்சிகளைப் பார்ப்பதும் தினந்தினம் வளர்ந்து பூக்களையுருவாக்கி காயாகி கனிவதை காணும் போது எமது மனத்திலும் புத்துணர்வை உருவாக்கிக் கொள்ளலாம். இயற்கையுடன் வாழுதல் என்பது இங்கே முதன்மைப்படுத்தப்படல் வேண்டும்.

வீட்டுத் தோட்டமென்பது வீட்டைத்தவிர்த்து ஒரு இடத்தில் அமைக்கப்படுவது என பொருள்படாது. வீட்டிலுள்ள இட வசதிக்கேற்ப தாவரங்களை வளர்க்கும் ஒரு கலை என்பதனை புரிந்து கொள்ளுங்கள். வேண்டிய அழகுத் தாவரங்களையும் இதில் வளர்க்கலாம். காலையில் எழுந்து தாவரங்களுடன் இருந்து விட்டு வேலைக்குப் போவதும் மாலையில் நேரமுள்ள போது சிறுசிறு வேலைகளைச் செய்வதும் பொழுது போக்காக வீட்டுத் தோட்டத்தை வலம் வருவதும் சுகமான நிகழ்வுகளாகும்.

அநேகமான குடும்ப சூழல், வேலைப்பளு என்பன பலருக்கு மனவுளைச்சலை ஏற்படுத்தி விடுகின்றது. மனம் குளிர்மையடைய பசுமை என்றுமே கைகொடுக்கும். பிளாஸ்ரிக் பூக்களையும் தாவரங்களையும் வீட்டில் வைத்திருப்பதால் எந்தவிதமான பிரயோசனமுமில்லை. நிகழ்வு அல்லது விழா ஒன்றிற்கு தேவைப்படின் பிளாஸ்ரிக்காலான பொருட்களை பயன்படுத்தினாலும் அங்கேயும் கூட உயிருள்ள தாவரங்களை வைத்திருப்பது போன்ற இனிமையான சுகம் வராது.

அழகில் உயிரோட்டம் இருத்தல் மனதிற்கு என்றுமே நல்லது. வீட்டுத் தோட்டத்தை உருவாக்கி அதிலிருந்து கிடைக்கும் சுகந்தத்தை அனுபவியுங்கள். வாழ்க்கை வாழ்ந்து பார்ப்பதற்காகவே என்பதன் அர்த்தம் இதனூடாகப் புரியும்.

# அமெரிக்கப் போர் விமானங்கள் பறந்தது குறித்து முரண்பாடான கருத்துக்கள்

## கேள்வியெழுப்புகிறது ஜே.வி.பி.

அமெரிக்க விமானங்கள் இலங்கையின் வான் பரப்புக்குள் அத்துமீறியதாக கூறப்படும் சம்பவத்தின் உண்மைத் தன்மைப் பற்றியும் இச்சம்பவம் தொடர்பில் பெறப்பட்ட முரண்பாடான அறிக்கைகள் பற்றியும் ஜே.வி.பி. அரசாங்கத்திடம் கேள்வி எழும்பியுள்ளது.

யார் பொய் கூறிகிறார்? யாரை நாம்புவது? இதுவே எமது கேள்வி என ஜே.வி.பி. யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறினார்.

அமெரிக்காவின் அழுத்தத்துக்கு பணிந்து ஊடுருவல் ஏதும் நடக்கவில்லை என்று கூறியதற்கு பதிலாக இந்த விடயத்தை அரசாங்கம் விசாரித்திருக்க வேண்டுமென அவர் கூறினார்.

ஊடுருவல் நடந்ததாக விமானப்படையின் பேச்சாளர் கூறியுள்ளார். அவர்தான் ராடர்களை கண்காணிப்பவர். இவர் கூறுவதை நம்பாமல் அமைச்சர் சொல்வதை கேட்பது எவ்வாறு பொருந்தும்? இந்த விடயங்கள் அமைச்சருக்கு விளங்காதவை என சோமவன்ச அமரசிங்க கூறினார்.

அமெரிக்க விமானத்தின் ஊடுருவல் பற்றி உண்மை கூறிய விமானப்படை அதிகாரியை இடமாற்றம் செய்ய வேண்டாமெனவும் அவர் கூறினார். (4-2)

# கடல்வழியாக இலங்கை வரவிருந்த மின்சார விநியோகம் ஆந்திராவுக்கு மாற்றப்பட்டது

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கடல் மார்க்கமாக விநியோகிக்கப்படவிருந்த மின்சார வேலைத்திட்டம், ஆந்திரா மாநிலத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

தமிழக கடல்பகுதியில் இந்த வேலைத் திட்டத்துக்கான மண் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த பணிகள் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் ஆரம்பமானது.

எனினும் தமிழகத்தின் ஆட்சியை ஜெயலலிதா தலைமையிலான அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றியதைத் தொடர்ந்து, இந்த திட்டத்தை தமிழக அரசாங்கம் கைவிட்டுள்ளது.

இதன்பின்னர் இது ஆந்திரா மாநிலத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. (4-2)

# திருகோணமலையில் கிறிஸ்பூதம் என்ற சந்தேகத்தில் 8 பேர் கைது

(திருகோணமலை)

திருகோணமலையில் பல பிரதேசங்களில் இருந்தும் கிறீஸ் பூதம் என்ற சந்தேகத்தின்பேரில் 8 பேர் உட்பட வான் ஒன்றையும் பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இறக்கக்கண்டி, நிலாவெளி, புடைவைக்கட்டு ஆகிய பகுதிகளில் இருந்தே குறித்த சந்தேகநபர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இறக்கக்கண்டிப் பகுதியில் மதுபோதையுடன் வானில் வந்தவர்கள் இருளில் வாகனத்தை நிறுத்திவிட்டு நின்றபோது அப்பிரதேச வாசிகள் அவர்களை விசாரித்த போது பிஸ்டல், கத்தியைக் காட்டியதனால் ஆத்திரமடைந்த பிரதேச வாசிகள் அவர்களை மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளை வானொன்றில் நிலாவெளி, அடம்பொடவெட்டை, இக்பால்நகர் போன்ற பகுதிகளில் இரண்டு இரண்டுபேராக இறக்கி விட்டு சென்றதை அவதானிக்க முடிந்ததாகவும் பிரதேசவாசி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிலாவெளி, இக்பால்நகர் பகுதிகளில் வீதிகளால் சென்ற வாகனங்கள் அனைத்தும் பிரதேச இளைஞர்களால் மறித்து பரிசீலிக்கப்பட்டதுடன் பிரதேச செய்திகளை சேகரிக்கச் சென்ற செய்தியாளர் கமராவுடன் சென்றதனால் அவர் தீவிரமாக இளைஞர்களால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக குச்சவெளிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதுபோன்று அம்பாறை, பொத்துவில், ஊறணி பிரதேசத்தில் மர்மமான முறையில் நடமாடிய இராணுவத்தைச் சேர்ந்த 3 பேரை நேற்று முன்தினம் இரவு பொதுமக்கள் சுற்றுவளைத்து பிடித்துத் தாக்கியுள்ளனர்.

தாக்கியபோது அவர்களை பொத்துவில் பொலிஸார் மீட்டெடுத்துச் சென்றுள்ளதாகவும் பிதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஒருசில பிரதேசங்களில் இவ்வாறு மக்களால் பிடிக்கப்பட்ட மர்மமனிதர்களில் மனநிலை குன்றியவர்களும், பிரதேசத்திற்கு புதியவர்களும் அடக்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)







துனுக்காய் கல்வி வயத்திற்குட்பட்ட மு/விநாயகபுரம் அ.த.க. பாடசாலையில் அண்மையில் கணனிக் கூடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட துனுக்காய் பிரதேச செயலர் எஸ். குணபாலன் உரையாற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் எஸ். சத்தியசீலன் மற்றும் ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# அம்பாறையில் மர்மமனிதன் விவகாரம்; பொலிஸாருடன் மக்கள் கைகலப்பு

அம்பாறை, சம்மாந்துறை பிரதேசத்தில் மர்மமனிதர் இருவரை பொலிஸார் காப்பாற்ற முற்பட்டார்கள் என பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து கைகலப்பில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது கண்ணீர்ப் புகை குண்டுகள் வீசி கலகத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதுடன் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள கோரக்கோயில் பிரதேசத்தில் சம்பவதினம் இரவு 8 மணியளவில் பெண்ணொருவர் குளித்துக்கொண்டிருந்த போது அவ்விடத்திற்கு வந்த மர்மமான இருவர் அப்பெண் மீது சேட்டையில் ஈடுபட முற்பட்ட போது அப்பெண் கூச்சலிட்டு கத்தியதையடுத்து அவ் இருவரும் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்குள் ஓடி ஒழிந்துள்ளனர்.

இதனை அவதானித்த பொது மக்கள் ஒன்று திரண்டு பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு அவர்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு கோசமிட்டனர். இவர்களைப் பொலிஸார் அகற்ற முற்பட்டவேளையில் பொலிஸார் மீது கல்லெறிகள் வீழ்ந்தன. இதனால் ஆத்திரமடைந்த பொலிஸார் இவர்கள் மீது கண்ணீர்ப் புகை குண்டுகள் வீசி கலகத்தை அடக்க முற்பட்டனர்.

இச்சம்பவத்தையடுத்து பிரதேசத்தில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டதுடன் விசேட அதிரடிப் படையினர் வரவழைக்கப்பட்டதையடுத்து நிலைமை சுமுகநிலைக்கு திரும்பியுள்ளதுடன் பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (4-2)

# உலக வங்கிக் குழுவினர் கிளிநொச்சிக்கு விஜயம்

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கல்மடுக்குளத்தின் புனரமைப்பு வேலைகளை உலக வங்கியின் உயர் மட்டக் குழுவினர் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு விஜயம் செய்து பார்வையிட்டனர். இப்புனரமைப்பு வேலைகள் என்றிப் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடனும் உலக வங்கியின் இலகு கடனுதவியுடனும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)

# பட்டினியால் வாடும் வடபகுதிச் சிறுவர்கள்

## இரும்பு விற்பனை செய்யும் நிலை

(கொழும்பு)

வடபகுதி சிறுவர்கள் உயிராபத்தையும் கவனத்தில் கொள்ளாது இருப்புத் துண்டுகளைச் சேகரித்து விற்பனை செய்து வருகின்றனர். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழும் சிறுவர்கள் கண்ணிவெடி உள்ளிட்ட வெடிபொருட்களின் இரும்புத் துண்டுகளைச் சேகரித்து வருகின்றனர்.

இராணுவத்தினரால் பாதுகாப்பற்ற பிரதேசம் என அறிவிக்கப்பட்ட பிரதேசங்களுக்குள் சென்று இவர்கள் இரும்புத் துண்டுகளைச் சேகரித்து வருகின்றனர். யுத்தம் காரணமாக பெற்றோரை இழந்த மற்றும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் இந்த நிலைமையை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை, இந்த மாவட்டங்களில் சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

சில சிறுவர்கள் கூலித்தொழில் செய்ய ஆரம்பித்துள்ளனர். இதன் காரணமாக சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளது. யுத்தம் நிறைவடைந்து இரண்டு வருடங்களுக்கு மேல் கடந்துள்ள நிலையில் வடபகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளது. (4-2)

# வரட்சியான காலநிலை காரணமாக மின்சார சபைக்கு நட்டம்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

வரட்சியான காலநிலை காரணமாக நீர்மின்நிலையங்களை அவற்றின் உச்ச அளவில் இயக்க முடியாததால் இலங்கை மின்சார சபைக்கு இவ்வருடம் ஜூலை மாதம் முதல் 3.6 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மின்சக்தி வலுசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

எனவே, பாவனையாளர்கள் அனைவரும் அவர்களின் சொந்த நன்மைக்காகவும் நாட்டின் நன்மைக்காகவும் மின்சாரத்தை சேமிப்பதை வழக்கமாக்கிக் கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்.

எவ்வாறெனினும் மின்வெட்டுக்கள் ஏற்படாது எனவும் இழப்புக்களை குறைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இதற்கு விதுல்க - 2011 கண்காட்சி அவற்றுள் ஒன்றாகும் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறினார். (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.08 13

★ 1415- நூறு ஆண்டுப் போர்: இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றி மன்னன் 8 ஆயிரம் பேருடன் பிரான்சை அடைந்தான்.

★ 1516-புனித ரோமப் பேரரசன் ஐந்தாம் சார்ள்ஸ் நேப்பில்சையும் பிரான்சின் முதலாம் பிரான்சிஸ் மிலானையும் உரிமை கொண்டாட இரு நாடுகளுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1536-ஜப்பானில் கியோட்டோவில் உள்ள என்றியாக்கு கோயிலின் பௌத்த மதகுருக்கள் கியோட்டோவில் இருந்த 21 நிச்சிரன் கோயில்களைத் தீக்கிரையாக்கினர்.

★ 1849-யாழ்ப்பாணம் பதில் மறை மாவட்டம் நிறுவப்பட்டது.

★ 1913-ஹரி பிறியர்லி துருப்பிடிக்காத எஃகுவைக் கண்டுபிடித்தார்.

★ 1920-போலந்து- சோவியத் ஒன்றியம் போர் ஆரம்பமாயிற்று. ஒகஸ்ட் 25 இல் முடிவடைந்த இப்போரில் செம்படையினர் தோற்றனர்.

★ 1937-ஷங்காய் சமர் ஆரம்பமானது.

★ 1954-பாகிஸ்தான் தனது தேசிய கீதத்தை முதன் முறையாக வானொலியில் ஒலிபரப்பியது.

★ 1960-மத்திய ஆபிரிக்கக் குடியரசு பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1961-ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு பேர்லினின் கிழக்கு மற்றும் மேற்கு எல்லைகளை மூடி கிழக்கு ஜேர்மனியினர் தப்பிச் செல்லாவண்ணம் பேர்லின் சுவரைக் கட்ட ஆரம்பித்தது.

★ 2004-கறுப்பு வெள்ளி மாலைதீவுகள் தலைநகர் மாலேயில் இடம்பெற்ற அமைதியான அரச எதிர்ப்புப் போராட்டம் இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டது.

★ 2004-புருண்டியில் கடும்பா அகதிகள் முகாமில் இருந்த 156 டுட்சி இன அகதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 2004-28 ஆவது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஏதென்சில் ஆரம்பமாகின.

★ 2006-யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட எறிகணை வீச்சில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1899-ஆல்ஃப்ரெட் ஹிட்ச்காக், ஆங்கிலத் திரைப்பட இயக்குநர் (இ.1980)

★ 1926-ஃபிடெல் காஸ்ட்ரோ, கியூபாவின் புரட்சியாளரும் ஜனாதிபதியும்

### இறப்புக்கள்

★ 1910-புளோரென்ஸ் நைட்டிங்கேல், ஆங்கிலத் தாதி (பி.1820)

★ 1917-எடுவர்டு பூக்னர், ஜேர்மனிய வேதியியல் அறிஞர் (பி.1860)

★ 1946-எச்.ஜி.வெல்ஸ், ஆங்கில எழுத்தாளர் (பி.1866)

### சிறப்பு நாட்கள்

★ மத்திய ஆபிரக்கக் குடியரசு- சுதந்திர தினம் (1960)

★ அனைத்துலக இடக்கையாளர் தினம்.

# நவீன எண் சோதிடம்




## மனக் கட்டுப்பாட்டால் கிடைக்கக்கூடிய சித்திகள் எளிதில் வரப் பெறுவர் 18

## உடல் எண் 2 உயிர் எண் 7

2,11,20,29 போன்ற தேதிகளில் பிறந்து தேதி,மாதம்,வருடம் இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 7 வருமேயானால் இவர்கள் சந்திரன், கேது ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்கள். இவர்களில் சிலர் பார்ப்பதற்கு உயரமானவராகவும் தன் உடம்புக்குத் தகுந்தாற் போல சதைப்பற்றும் கொண்டு காட்சியளிப்பர். நல்ல நிர்வாகத் திறமையும், அன்புள்ளமும் கொண்ட வாழ்க்கைத் துணைவர் இவர்களுக்கு அமைந்து விடுவதால் குடும்ப வாழ்க்கை சிறப்படையும். கல்வி, பொருளாதார வசதி எல்லாம் நன்றாக அமைந்து விடும். அனால், பெயர் நன்றாக அமையாவிட்டால், கஷ்டத்திற்குள்ளாவார்.

இந்த எண்ணிக்கையில் கஷ்டப்படுபவர்கள் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாகப் பெயரை மாற்றி அமைத்துக் கொண்டால், மிக மேன்மையடைவர். நேர்மையும் பிறர் கஷ்டத்தைக்கூட தாங்கிக்கொள்ள முடியாத மன நிலையும் கொண்ட இவர்கள் எப்பொழுதும் தனிமையில் சிந்தனை செய்து கொண்டிருப்பர். தனது வாழ்க்கையைக் குறிக்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

கோளுடன் ஆரம்பித்து வெற்றியடையும் பாக்கியம் உள்ளவர்கள். மனக்கட்டுப்பாட்டால் வரக்கூடிய சித்திகள் எளிதில் வரும். தெய்வ பக்தி இவர்களிடம் அதிகம் காணப்படும். நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்க்கை நடத்தும் இவர்கள் எப்போழுதும் தூய்மையாகக் காட்சியளிப்பர்.

இந்த எண்ணில் பிறந்த அன்பர்களுக்கு பொருத்தமானதாக பெயரை அமைத்துக் கொடுத்தவுடன் உத்தியோக உயர்வும் பொருளாதார வசதியும் பெருகி வாழ்வதையும் அறியக் கூடியதாகவுள்ளது. இவர்கள் சில நேரங்களில் [illegible] பேசுவர். ஆனால், சிறு பிரச்சினைகள் வந்தால் மனதைக் குழப்பிக்கொண்டிருப்பர். மிதமிஞ்சின கற்பனா சக்தி படைத்த இவர்கள் தனிமையில் இருந்து பல திட்டங்களைப் போட்டுக் கொண்டிருப்பர். மற்றவர்களோடு ஒட்டிப் போகும் தன்மை குறைவாக இருப்பதால் எப்பொழுதும் அளவோடு பேசி நிறுத்திக் கொள்வர். தனக்கு மூடு வந்தால் காரசாரமாகப்பேசுவர். சங்கீதம் தெய்வீகம் மற்றும் கலைகள் சம்பந்தமான விடயங்களில் அதிக நாட்டமுடைய இவர்கள் ஏதாவது ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டே இருப்பர்.

ஏதாவது ஒரு பிரச்சினை வந்து விட்டால் முகத்தைச் சுளிச்சுக் கொண்டு கடிந்து பேசுவர். எதையும் துணிந்து எதிர்த்துப் பேசும் இவர்கள் எழுதுதல் மூலம் தன் கருத்துக்களைச் சரமாரியாகப் பொழிவர். சிலர் இரசாயன ஆராய்ச்சி செய்வதாலும் சாயங்கள் காய்ச்சுவதாலும் பொருள் சேர்ப்பர். பொதுவாக இந்த எண்ணில் பிறந்தவர்கள் நல்ல புகழும் பெரும் செல்வமும் சேர்க்கும் பாக்கியம் உடையவர்களே. அதனால், பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டு சிறப்பாக வாழ வாழமுடியும்.

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

**தொழில்**

இரசாயன சம்பந்தமான தொழிலாலும் எழுத்தாலும் பச்சைப் பொருள்கள் சம்பந்தமான தொழிலாலும் சாயங்கள், நூல் போன்றவற்றாலும் மற்றும் சாப்பாட்டுப் பொருளாலும் கலை சம்பந்தமான தொழிலாலும் இலாபத்தைப் பெறுகின்றனர்.

**நோய்**

இவர்களுக்கு இரத்தக் கொதிப்பு, வாயுக் கோளாறு, மூட்டுவலி போன்ற வியாதிகள் வர வாய்ப்பு உண்டு. மன பீதியும் ஏற்படலாம். ஆனால், பொருத்தமானதாகப் பெயர் அமைந்து விட்ட்டால் எந்த வியாதியும் அதிகமாக வராது.

**பெயர் அமைக்கும் முறை**

இவர்கள் தங்களுடைய பெயரை 15,24,33,42,51,69 போன்ற எண்களிலும் 34,43 போன்ற எண்களி லும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-6,7

யோகமான தேதிகள்- 6,15,24; 7,16,25

யோகமான மோதிரக்கல்- வைடூரியம், முத்து, சந்திரகாந்தக் கல், ஜேட்

யோகமான நிறம்- வெளிர் மஞ்சள், வெளிர் நீலம், பச்சை

ஆகாத தேதிகள்- 9,18,27

ஆகாத நிறம்- சிவப்பு

■ ■ ■

## பெயர் எண்களின் பலன்

**53 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்கள் இளமையிலேயே முதியோர் போன்ற அனுபவத்தைப் பெறுவர். எல்லா விடயங்களிலும் தலையிடுவர். இதனால் இவர்களுக்கு நிம்மதியான வாழ்க்கை அமையாது பொதுக் காரியங்களில் ஈடுபட்டு யாரும் செய்ய முடியாத காரியத்தைச் செய்து புகழடைவர் குடும்ப வாழ்க்கை பாதிக்கும். ஆனால் 5, 14,23 போன்ற தேதியில் பிறந்தவர்களுக்கு மட்டும் இந்த எண் நன்மையளிக்கும்

**54 எண் பலன்**


5 என்ற புதனும், 4 என்ற இராகுவும் ஒன்று சேர்ந்து 54 எண் வருவதால் சுறுசுறுப்பும் நல்ல பேச்சாற்றலும் கொண்டு சிறந்து விளங்குவர். நல்ல புகழும் செல்வமும் பெற்று பலருக்கு அறிவுரை கூறும் அறிவாளியாகத் திகழ்வர். தான் என்ற அகந்தையில் சில நேரங்களில் தோல்வியுறுவர். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தால் நல்ல முன்னேற்றம் கிடைக்கும் 9,18,27 போன்ற தேதிகளில் பிறந்தவர்களுக்கு, சிறந்த வாழ்க்கை அமையும். ஆனால் 1, 10,19; 7,16,25 போன்ற தேதியில் பிறந்தவர்களுக்கு கெடுதலை விளைவிக்கும்.

**55 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்களுக்கு உடல் பலமும் மனபலமும் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு வளர்ந்து விடும். நீதி, நேர்மை இவை இரண்டும் பெற்ற இவர்கள் நிதானத்தை இழப்பர். இதனால், சண்டை மூளும். அச்சண்டையிலும் வெற்றி பெறுவர். பேரறிவும் பெரும்பகழும் பெற்ற இவர்கள் தனக்கு ஒரு சரியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் தெரியாவர்களாவர். வியாபார விலாசங்களுக்கு இந்த எண்ணைப் பெயராக அமைப்பதாக இருந்தால் வியாபாரக் கூட்டாளிகள் இருக்கக் கூடாது.


**56 எண் பலன்**

புதனாகிய 5 உம் சுக்கிரனாகிய 6 உம் சேர்ந்து 56 எண் வருவதால் எப்பொழுதும் சுறுசுறுப்பாகக் காட்சியளிக்கும் இவர்கள் பெரும் செல்வம் சேர்ப்பர். 7,16,25 போன்ற தேதிகளில் பிறந்தவர்கள் இந்த எண் பெயரில் வருகின்றமாதிரி அமைத்துக் கொள்வார்களேயானால் எவரும் சாதிக்கமுடியாத காரியத்தைச் சாதிப்பதோடு, பேரும் புகழும் செல்வமும் சேர்ப்பர். ஆனால் மற்றைய தேதிகளில் பிறந்தவர்கள் பிறரை ஏமாற்றிப் பிழைக்கும் தொழிலில் ஈடுபடுவர்.




■ ■ ■

## கற்களும் நற்பலன்களும்



**ஜிர்கான்**

இதுவும் வைரம் போன்றவை. ஆனால், விலை குறைவான கல். ஐந்து எண்காரர்கள் வைரத்திற்குப் பதில் இதை அணியலாம். வைரம் கொடுக்கும் நற்பலன்களில் .பாதியை அளிக்க வல்லது.


(தொடரும்)

# இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றம் தமிழர் பிரச்சினைக்கு புத்துயிர் அளிக்கும்

## இந்தியப் படையின் முன்னாள் புலனாய்வு தலைவர் கேணல் ஹரிகரன் செவ்வி

**இலங்கையானது தனக்கெதிராக முன்வைக்கப்பட்டுள்ள யுத்தக்குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு முகம்கொடுக்கத் தயங்குவதானது இலங்கை அரசாங்கத் தரப்பு உண்மையில் குற்றம் இழைத்துள்ளது என்பதை ஆதாரப் படுத்த போதுமானதாகும்.**

**இவ்வாறு இந்தியப்படையின் முன்னாள் புலனாய்வுத்தலைவர் கேணல் ஆர்.ஹரிகரன் தென்னாசிய பகுப்பாய்வுக் குழுவின் வலைதளத்தில் தெரிவித்துள்ளார். அவ்வலைத்தளத்தில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் கேள்வி, பதில் வடிவில் வருமாறு,**



**கேள்வி:** சனல் 4 தொலைக்காட்சியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை இராணுவப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றக் காட்சிகளைக் கொண்ட காணொளி உண்மையானதென நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: யுத்தக்குற்றங்கள் தொடர்பாக இரு விடயங்கள் தொடர்புபட்டுள்ளன. இந்தக் காணொளியானது உண்மையானதா அல்லது இல்லையா என்பது முதலாவது விடயமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் வல்லுநர்கள் உள்ளடங்கலாக பல திரைப்படத்துறை வல்லுநர்களால் இக்காணொளிக் காட்சிகள் உண்மையானவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

எது எவ்வாறிருப்பினும் இலங்கையை சேர்ந்த திரைப்பட வல்லுநர்கள்இக் காணொளி காட்சிகள் முற்றிலும் போலியானவை எனக் கூறுகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அனைத்துலக ஆணைக் குழுவானது தன்னால் ஆராயப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக இக்காணொளியைப் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பான விசாரணை ஒன்றை உள்நாட்டிலோ அல்லது அனைத்துலக ரீதியிலோ மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் தயக்கம் காட்டிவருவதானது இரண்டாவது விடயமாகும்.

ஆரம்பத்திலிருந்தே இலங்கை அரசாங்கமானது ஊடகவியலாளர்கள் யுத்தம் இடம்பெற்ற பகுதிகளுக்குச் செல்வதற்கான அனுமதியை வழங்குவதில் தயக்கம் காட்டியது.

இலங்கை அரசாங்கமானது தனது ஆளுமையைப் பயன்படுத்தி யுத்த வலயத்தில் அகப்பட்ட மக்களை அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தியிருக்க முடியும்.

இதனால் பல ஆயிரக்கணக்கான பொதுமக்களின் உயிர்களை இலங்கை அரசாங்கம் காப்பாற்றியிருக்க முடியும். இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கமானது அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியையே வழங்கியிருந்தது.

இந்த மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளைக் கூட இலங்கை அரசாங்கமானது ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கவில்லை. யுத்தம் முடிவுற்ற பின்னர் தம்மிடம் கைதிகளாகவுள்ள விடுதலைப் புலிகளின் பெயர்களை இன்னமும் இலங்கை அரசாங்கம் வெளியிடவில்லை.

மேற்கூறப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மை என்ற நிலையில் குறிப்பிட்ட சில யுத்தக்குற்றங்களாவது மிகவும் உண்மையானவை என நான் உறுதியாக நம்புகிறேன். அத்துடன் இந்த யுத்தக் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது.

**கேள்வி:** இந்த விடயத்தை இலங்கை அர சாங்கமரானது சரியான முறையில் கையாண் டுள்ளது என நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: எந்தவொரு பொறுப்பான அரசாங்கமும் தனது ஆட்சியைப் பாதிக்கும் விடயங்களுக்கு கூடிய முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

இதனை இலங்கை அரசாங்கம் செயற்படுத்த விரும்பினாலும் அல்லது விரும்பாவிட்டாலும்கூட இலங்கையில் வாழும் பெரும்பாலானவர்கள் மற்றும் அனைத்துலக சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கை அரசாங்கம் உடனடி விசாரணைகளுக்கு முகங்கொடுக்க முன்வர வேண்டும் என அழுத்தம் கொடுத்துவருகின்றனர்.

இதன்விளைவாக இலங்கை மீது கொண்டிருந்த மதிப்பானது பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தனது நாட்டில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள் தொடர்பான விடயத்திற்கு அதிமுன்னுரிமை கொடுத்து அதனைக் கையாள்வதில் இலங்கை அரசாங்கம் தவறிழைத்துவிட்டது என்பதே எனது கருத்தாகும்.

**கேள்வி:** சில மேற்குலக நாடுகள் தமது நாடுகளுக்குள் மேற்கொள்ளப்பட்டு வரும் அழுத்தத்தின் காரணமாக அல்லது அனைத்துலக அரசியல் அதிகாரத்தின் ஒரு பகுதியாகவே இலங்கை மீது தமது எதிர்ப்பைக் காட்டிவருகின்றன என அரசியல் தலைவர்கள் உள்ளடங்கலாக இலங்கையில் வாழும் சிலர் கருதுகின்றனர். இது தொடர்பான தங்களின் கருத்தை வழங்கவும்.

பதில்: இலங்கை உள்ளடங்கலாக அனைத்து நாடுகளும் பிறநாடுகளில் இடம்பெறும் செயற்பாடுகளைத் தமது சொந்தக் கண்ணோட்டங்களிலேயே பார்க்கின்றனர் என்பது உண்மையான விடயமாகும்.

ஆகவே இலங்கை விடயத்திலும் ஏனைய நாடுகள் தமது நாட்டு அரசியல் கொள்கைகள் மற்றும் சொந்த மக்களின் அழுத்தங்கள் போன்றவற்றைக் கருத்திற்கொள்கின்றார்கள். அரசியல் அதிகாரத்துவம் என்பது, பூகோள - அரசியல் உண்மைத்தன்மையின் ஒரு பகுதியாகும்.

புவியியல் ரீதியாக மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள இலங்கை போன்ற நாடுகள் தொடர்பான விடயங்களும் இந்த வகையிலேயே அணுகப்படுகின்றது.

தற்போது இலங்கை மீது அழுத்தம் கொடுத்துவரும் அதே அனைத்துலக சமூகம் தான் 2002இல் ஒரு சமரச உடன்பாட்டை மேற்கொள்வதற்காக சில பில்லியன் டொலர்கள் பெறுமதியான நிதியைக் கொண்டு வரத் தீர்மானித்திருந்தது.

ஆனால் இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவருவதில் முன்னின்ற பெரும்பாலான நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்திருந்தன.

இந்த நாடுகள் இலங்கையில் உள்நாட்டுப் போர் இடம்பெற்ற காலத்தில் விடுதலைப் புலிகளின் அனைத்துலக ஆயுத தளபாட வழங்கற் தொடரைத் தடுத்து நிறுத்துவதற்காகச் செயற்பட்டன.

இருப்பினும் இறுதி யுத்தகளத்தில் இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட மனித வுரிமை மீறல்களின் காரணமாக விடுதலைப் புலிகளை அழிப்பதில் இலங்கைக்கு உதவி புரிந்த அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் கூட தற்போது இலங்கை மீது தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளன. இவர்கள் முதலில் உதவி செய்த அதே இலங்கையின் தலைமையைத் தற்போது ஏன் இந்த நாடுகள் எதிர்த்து நிற்க வேண்டும்?

**கேள்வி:** தற்போது சனல் 4 தொலைக் காட்சிச் சேவையால் வெளியிடப்பட்டுள்ள காணொளியானது விடுதலைப் புலிகள் மற்றும் தமிழீழம் ஆகியவற்றுக்குப் புத்துயிர் வழங்க விரும்பும் புலம்பெயர் தமிழ் மக்களால் உருவாக்கப்பட்ட ஒரு போலி ஆவணம் என இலங்கையர்கள் பலர் கருதுகிறார்கள். இது தொடர்பான தங்களது அபிப்பிராயத்தைக் கூறமுடியுமா?

பதில்: இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகத் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யுத்தக் குற்றச்சாட்டுகள் என்பது விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் புத்துயிர் அழிப்பதற்காக இறைவனால் வழங்கப்பட்ட சந்தர்ப்பம் என புலம்பெயர் தமிழ்ச் சமூகம் கருதுகின்றது.

எது எவ்வாறிருப்பினும் சனல் 4 தொலைக் காட்சிச் சேவையால் வெளியிடப்பட்டுள்ள காணொளியானது புலிகளின் செல்வாக்குடன் தயாரிக்கப்பட்டது எனக் கூறுவதில் எந்தவொரு நம்பகத்தன்மையும் இல்லை.

ஏனெனில் விடுதலைப் புலிகள் அமைப்பு தற்போது செயற்படு நிலையில் இல்லை. இந்த அடிப்படையில்இலங்கையானது தனக்கெதிராக முன்வைக்கப்பட்டுள்ள யுத்தக் குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு முகங்கொடுக்கத் தயங்குவதானது இலங்கை அரச தரப்பு உண்மையில் குற்றமிழைத்துள்ளது என்பதை ஆதாரப்படுத்தப் போதுமானதாகும்.

இவற்றுக்கப்பால் இலங்கை அரசாங்கமானது புலம்பெயர் தமிழ்ச் சமூகத்திற்குள் புதைந்து கிடக்கும் மனவேதனையை வெறுமனே அசட்டை செய்து சமாளித்துவிட முடியாது.

புலம்பெயர் தமிழர் இலங்கை மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கின்ற சனல் 4 தொலைக் காட்சிச் சேவையால் வெளியிடப்பட்டுள்ள காணொளிகள் உள்ளடங்கலாக எந்தவொரு நடவடிக்கைக்கும் ஆதரவளிக்கத் தயாராகவுள்ளனர்.

உலகின் எந்தவொரு பகுதிகளிலும் யுத்தக் குற்றங்கள் இடம்பெறும்போது மிக உன்னிப்பாக அவதானிக்கின்ற அனைத்துலக அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கை விடயத்திலும் தமது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. இவையனைத்தும் இலங்கை மீது அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு மேலும் உத்வேகத்தையளிக்கின்றன.

**கேள்வி:** தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இன இணக்கப்பாட்டு முயற்சியானது இலங்கை மீதான யுத்தக்குற்றங்கள் காரணமாக பின்தள்ளப்பட்டுவிடும் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. இது தொடர்பான தங்களின் கருத்து என்ன?

பதில்: தற்போது உண்மைத்தன்மை வாய்ந்த இணக்கப்பாட்டு முயற்சிகள் இலங்கையில் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகிறது? இது அபிவிருத்தி என்ற பெயரில் மட்டுமே மேற்கொள்ளப்படு கின்றது.

தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்ட அதிகாரப்பகிர்வு தொடர்பாக மீள ஒரு தடவை பாருங்கள். 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. APRC உம் அதனால் தயாரிக்கப்பட்ட அறிக்கையும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

தற்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படுவதற்கான ஏற்பாடு கள் இடம்பெறுகின்றன. இன இணக்கப் பாடு விடயத்தில் இவ்வாறு மாற்றங்கள் அடிக்கடி இடம்பெறும்போது உண்மை யான இணக்கப்பாடு என்பது சாத்தியப் படுமா?

இந்த அடிப்படையில் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கமானது அசட்டை செய்தால் இணக்கப்பாட்டு நடவடிக்கைகளும் உண்மையில் பாதிப்புக்குள்ளாகும்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பான நடுநிலையான விசாரணையும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளும் இலங்கையில் உண்மையானதொரு இணக்கப்பாட்டை உருவாக்கத் துணை புரியும்.

**கேள்வி:** யுத்தக்குற்றங்கள் தொடர்பான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டால் யுத்தவெற்றி மூலம் இலங்கை இராணுவத்தினர் பெற்றுக்கொண்ட கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படும் என நீங்கள் கருதுகின்றீர்களா?

பதில்: ஒரு இராணுவத்திற்கான கௌரவம் என்பது யுத்தத்தை வெற்றிகொள்வதன் மூலம் மட்டும் பெற்றுக்கொள்ள முடியாது. இது யுத்தத்தை எவ்வாறு நடத்திச் சென்றுள்ளது என்பதிலும் ஒரு இராணுவத்தின் கௌரவம், மதிப்பு தங்கியுள்ளது.

யுத்தக் குற்றச்சாட்டு விசாரணை என்பது முழு இராணுவத்தினரிடமும் மேற்கொள்ளப்படமாட்டாது. யுத்த விதிமுறைகளை மீறிய ஒரு சில இராணுவ வீரர்கள் மட்டுமே விசாரணைக்கு முகங்கொடுக்க வேண்டும்.

இராணுவத்திலுள்ள சிலருக்கு எதிராக மட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது அந்த இராணுவம் சகல இனக்குழுமங்களாலும் ஒரு உண்மையான தேசிய இராணுவம் என்ற புகழைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**கேள்வி:** இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் இறுதிப்பகுதியில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்களுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்பாளியாவதற்கு இந்

**புதினப்பலகை**

தியாவும் பங்கு வகித்துள்ளது என நீங்கள் நினைக்கவில்லையா?

பதில்: நிச்சயமாக, இலங்கையுடன் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள இந்த விடயத்தில் இராமாயணத்தில் வருகின்ற அனுமான் போன்று மிகப் பிரதான பங்கு வகித்துள்ளது.

ஆனால் புதுடில்லியானது இந்த விடயத்தில் உறுதியான நம்பிக்கையுடன் இருப்பதுபோல் தெரியவில்லை. இலங்கை அரசாங்கம் மற்றும் இந்தியாவிலுள்ள தமிழ் மக்கள் ஆகிய இரு தரப்புகளையும் சமாளிக்க வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தற்போது புதுடில்லியை ஆளும் கூட்டணிக் கட்சி உள்ளது.

தமிழ்நாட்டுத் தேர்தல் முடிவானது புதுடில்லி மத்திய அரசாங்கமானது தனது நிலைப்பாட்டில் சரியாக நடந்துகொள்ளவில்லை என்பதை நிரூபித்துள்ளது.

தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கை விடயத்தில் மிகவும் கடும்போக்கைக் கடைப்பிடித்து வருகின்றார். இந்த விடயத்தில் இந்தியாவானது மிகத் தெளிவான வெளிப்படையான ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டி வரும் என நான் எதிர்பார்க் கின்றேன். ✷

# கருணைமனுக்களை நிராகரித்திருப்பது வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் அளிக்கிறது

## சீமான் தெரிவிப்பு



ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் கருணை மனுக்களை குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் நிராகரித்திருப்பது வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் தருகிறது என்று கூறி நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட அறிவு என் கிற பேரறிவாளன், சிறீஹரண் என்கிற முரு கன், சாந்தன் ஆகிய மூன்று பேரின் கருணை மனுக்களை குடியரசுத்தலைவர் பிரதீபா தேவி சிங் பாட்டீல் நிராகரித்து விட்டார் என்ற செய்தி மிகுந்த வருத்தத்தையும் ஏமாற்றத் தையும் அளிக்கிறது.இவர்கள் மூவருக்கும் இந்திய உச்ச நீதி மன்றம் 1999 ஆம் ஆண்டில் மரண தண்டனையை உறுதி செய்தது. அதன் பின் 2000 ஆம் ஆண்டில் இவர்கள் மூவரும் குடியரசுத் தலைவருக்கு தங்கள் மீது கருணை காட்டி மரண தண்டனையை குறைக்குமாறு கேட்டு கருணை மனுக்களை அனுப்பிவைத் தனர்.

அந்தக் கருணை மனுக்களின் மீது 11 ஆண்டுகளுக்கு பின் மத்திய உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையின் படி -முடிவெடுத்துள்ள குடியரசுத்தலைவர் கருணை மனுக்களை நிராகரித்துள்ளார். இது எதிர்பாராத வேதனை தரும் முடிவாகும்.

தங்கள் வாழ்வின் முடிவை நிர்ணயிக்கப்போகும் மரண தண்டனையை எதிர்பார்த்து 12 ஆண்டுகளாக வேலூர் சிறையில் வாடும் இந்த மூன்று பேரும் அப்படிப்பட்ட கொடுமையைத்தானே அனுபவித்துவந்தனர். வேதனையான அந்த சிறைக்காலத்திற்குப்பிறகு அவர்களின் தண்டனையைக் குறைத்து நிவாரணம் அளித்திருந்தால் அது மனிதாபிமானமாக இருந்திருக்கும். மாறாக தண்ட்னையை உறுதி செய்வது தண்டனை இரட்டிப்பாக்காதா? என்று கேட்கிறோம்.

தனது ஒரேமகனின் மரண தண்டனை குறைக்கப்படும் என்ற நம்பிக்கையில் இருந்த பேரறிவாளனின் தாயார் இன்றைக்கு நொருங்கிப் போயுள்ளார். ஒருநாள் தனது தந்தை விடுதலை பெறுவார் என்று எதிர்பார்த்த நளினியின் மகளுக்கு 12 ஆண்டுகளுக்குப் பிறகு துயரமான அதிர்ச்சி இன்றைய உலகம் மரணதண்டனையை சட்டத்தின் பாற்பட்ட நீதியாகக்கருதவில்லை.அதனால் தான் 137 நாடுகளில் மரணதண்டனை ஒளிக்கிப்பட்டு விட்டது. கொலை செய்தவனுக்கு தண்டனையாக நீதிமன்றம் அளிக்கும் மரணதண்டனையும் கொலை தான் என்று இன்றைய உலகம் கருதுகிறது. தண்டனையின் நோக்கம் குற்றம் செய்த மனிதனை மாற்றுவதே மாய்ப்பது அல்ல என்று உலகம் கூறுகிறது.

ஆனால் இந்திய அரசு மரண தண்ட னைக்கு எதிரான ஐ.நா.வின் அந்த பிரகடனத்தில் இதுவரை கையெழுத்திடவில்லை. அதன் விளைவே வாழ்வுரிமையை பறிக்கும் மரண தண்டனை மனிதாபிமானமற்று இந்தியாவில் இன்றும் வாழ்ந்து வருகிறது. மானுடத்தின் போக்கிற்கும் மனிதாபிமானத்திற்கும் எதிராக மரண தண்டனைக்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய அரசு முன்வராத நிலையில் மானுடம் வெறுக்கும் மரணதண்டனைக்கு முற்றுப்புள்ளி வைக்க மனிதாபிமானத்தோடு ஒரு தீர்மானத்தை தமிழக சட்டப் பேரவையில் மாண்புமிகு தமிழக முதல்வர் ஜெயலலிதா அம்மையார் நிறைவேற்ற வேண்டும்.

அதன் மூலம் வாழ்வுரிமையை பறிக்கும் மரணதண்டனைக்கு முதலில் முற்றுப்புள்ளி வத்த மாநிலமாக தமிழ்நாடு திகழவேண்டும் .அப்படியொரு தீர்மானம் நிறைவேற் றப்பட்டால் அது இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கும் ஒரு முன்மாதிரியாகும். அதனைச் செய்ய வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி கேட்டுக் கொ ள்கிறது. (ஸ்ரீ-2)

# விஜயகாந்தின் வீட்டுக்குமுன் போராட்டம் நடத்த முடிவு

பல்வேறு புகார்களுக்கு ஆளான மாவட்ட செயலாளரை மாற்றாவிட்டால் விஜயகாந் வீடு முன் உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படும் என தே.மு.தி.க.வினர் அறிவித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்ட தே.மு.தி.க செயலாளர் ரவிக்குமாரை பதவியிலிருந்து நீக்கக் கோரி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் போர்க் கொடி தூக்கியுள்ளனர். ஆனால் அவர் பதவி மாற்றம் செய்யப்படவில்லை ரவிக்குமாரை மாற்றக்கோரி திண்டுக்கல் பேகம்பூர் மண்டி பள்ளிவாசல் அருகே நேற்று முன்தினம் தே.மு.தி.க நிர்வாகிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லையெனில் சென்னையில் உள்ள கட்சித்தலைவர் விஜயகாந்த் வீடு முன் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும் என்றார். (ஸ்ரீ-4)

# குடியரசுத் தலைவருக்கு எதிராக — சட்டரீதியான நடவடிக்கை

## பழ.நெடுமாறன் அறிவிப்பு

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 3 பேரின் கருணை மனுக்களை குடியரசுத் தலைவர் தள்ளுபடி செய்த விவகாரத்தில் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்வோம் என்று பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் , ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண் டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் கருணை மனுக்களை குடியரசுத்தலைவர் தள்ளுபடி செய்து விட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

21 ஆண்டு காலம் சிறையில் வாடிய பின்பும் குடியரசுத் தலைவரிடம் கருணை மனு தாக்கல் செய்து 11 ஆண்டுகளுக்குப் பிறகும் இம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பது இயற்கை நீதிக்குப்புறம்பானதாகும்.

1992 ஆம் ஆண்டு சிறப்பு நீதிமன்றம் 26 பேருக்கும் ஒட்டு மொத்தமாக மரண தண்டனை விதித்தபோது அதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்காடி 18 பேர் குற்ற மற்றவர்கள் என விடுவிக்கப்படவும் மூவருக்கு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப் படவும் இக்குழு வழி செய்தது.

மரணதண்டனை விதிக்கப்பட்ட நால்வருக்காக அப்போதைய ஆளுநரிடம் கருணை மனு தாக்கல் செய்து அவர் அதை தள்ளுபடி செய்தவுடன் அது செல்லாது என உயர்நீதி மன்றத்தில் வழக்காடி வெற்றிபெற்றது இக் குழுவே ஆகும்.

அதைப்போல இப்போதும் மூவரின் கருணை மனுக்களை குடியரசுத் தலைவர் தள்ளுபடி செய்திருப்பதை எதிர்த்து சட்ட ரீதியான நடவடிக்கைகளை இக்குழு மேற்கொள்ளும். ராஜீவ் கொலையில் மேலும் புலன் விசாரணை செய்யப்பட வேண்டும் என ஜெயின் கமிஷன் அளித்த பரிந்துரையின் பேரில் அமைக்கப்பட்ட சி.பி.ஐ புலன் விசாரணைக்குழு இன்னமும் தனது விசாரணையை முடித்து அறிக்கையைத் தரவில்லை.

இதுபோன்ற உண்மைகளைக் கவனத்தில் கொள்ளாது இந்த மூவரின் கருணை மனுக்களை குடியரசுத்தலைவர் ஏற்க மறுத்திருப்பது வருந்தத்தக்கது.எனவே சட்டரீதியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை இக்குழு விரைந்து எடுக்கும் என்று பழ.நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கலைஞர் டி.வி எப்படி செயற்படுகிறது என்பது குறித்து எனக்கு எதுவும்.தெரியாது

## ஸ்பெக்ட்ரம் வழக்கில் கனிமொழி தெரிவிப்பு

(புதுடில்லி)

கலைஞர் டிவி எப்படி செயற்படுகிறது என்று எனக்குத் தெரியாது அதன் செயற்பாட்டிற்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ராஜ்யசபா எம்.பி கனிமொழி சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடுவழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை பதிவு செய்வதன் மீதான விவாதம் இரண்டு வாரங்களாக டில்லி சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றில் நடந்து வருகிறது.டில்லி வழக்கறிஞர்கள் நேற்று முன் தினம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதை அடுத்து இந்த வழக்கு விசாரணை தடைப்பட்டது.

வழக்கறிஞர் யாரும் நேற்று முன்தினம் வாதாட மறுத்து விட்டனர். இதைத் தொடர்ந்து இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிப்பதற்கு நீதி பதி ஓ.பி.சைனி அனுமதியளித்தார். இதையடுத்து ஒவ்வொருவராக தங்கள் கருத்துக்க ளை சுருக்கமாக அதிகாரபூர்வமற்ற வகையில் எடுத்து வைத்தனர்.தொலைத்தொடர்பு துறை முன்னாள் அமைச்சர் ராஜா கூறிய தாவது, ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு குறித்த விடயத்தில் நான் தனிப்பட்ட முறையில் முடிவு எடுத்ததாக சி.பி.ஐ கூறுகிறது. ஆனால் 2008 ஜனவரி 6 இல் பிரதமர் அலுவலகம் குறிப்பு ஒன்றை அனுப்பியது. அதில் தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு முந்தைய கட்டணத்தி லேயே ஆரம்பிக்க நிலையில் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு அளிக்கலாம் என சுறப்பட்டிருந் தது.

ஆனாலும் பிரதமர் அலுவலகம் மீது



இந்த விடயத்தில் சி.பி.ஐ சந்தேகம் தெரிவிக்கின்றது. பிரதமர் அலுவலகத்துக்கு தகவல் தெரிவிக்க வேண்டியது என் கடமை. மத்திய அரசில் 12 ஆண்டுகள் அமைச்சராக இருந்துள்ளேன். அமைச்சராக பதவிப் பிரமாணம் எடுக்கும் போது அரசியல் அமைப்பு சட்டத்துக்கு கட்டுப்படுகிறேன் என கூறினேன். இவ்வாறு ராஜா கூறினார்.

தி.மு.க ராஜ்யசபா எம்.பி கனிமொழி கூறுகையில், கலைஞர் டிவி செயற்பாட்டிற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை அவர்கள் எப்படி செயற்படுகின்றனர் என்பதும் அங்கு என்ன முடிவு எடுக்கப்படுகிறது என்பதும் எனக்குத் தெரியாது என்றார்.

கலைஞர் டிவி மேலாண் இயக்குநர் சரத் குமார் கூறுகையில், கடந்த சில மாதங்களாக சிறையில் நாங்கள் அவதிப்படுகிறோம் குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்கள் மீது இன்னும் குற்றப் பத்திரிகை கூட தாக்கல் செய்யவில்லை என்றார். தொலைத் தொடர்பு துறை முன்னாள் செயலர் சித்தார்த்த பெகுரா மற்றும் ஷாகித் பல்வா உள்ளிட்டோரும் தங்கள் கருத்துக்களை நீதிபதியிடம் தெரிவித்தனர். (4-2)

# பாரதச் செய்திகள்

# லோக்பால் மசோதாவில் எமது கோரிக்கை நிறைவேற வேண்டும்

## அன்னா ஹசாரே குழுவினர் தெரிவிப்பு

(புதுடில்லி)

எதிர்வரும் 15 ஆம் திகதி 8 மணிமுதல் ஒன்பது மணிவரை நாட்டு மக்கள் அனைவரும் மின் விளக்குகளை அணைத்து விட்டு தீபஒளி ஏற்ற வேண்டும் என ஹசாரே குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

அன்னா ஹசாரே குழுவினரின் உயர் மட்டக்குழு கூட்டம் டில்லியில் நேற்று முன் தினம் காலை நடந்தது. இக்கூட்டத்தில் பங்கேற்ற பின் குழு உறுப்பினர்களில் ஒருவரான அரவிந்த் கெஜ்ரிவால் கூறியதாவது, வலிமையான லோக்பால் மசோதாவை வலியுறுத்தி வரும் 16 ஆம் திகதி முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்க நாங்கள் உண்ணாவிரதம் நடத்த டில்லி ஜெயப்பிரகாஷ் நாராயணன் பார்க் அருகே பெரோஸ்ஷா கோட்லா ஸ்டேடி யத்தை பொலிசார் எங்களுக்கு ஒதுக்கியுள்ளனர்.

அவர்கள் ஒதுக்கியுள்ள இடம் திருப்தி அளிக்கிறது. அது நல்ல இடமே. எங்களின் கோரிக்கைகளில் இருந்து பின்வாங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை. கோரிக்கைகள் நிறைவேறும் வரை நாங்கள் யாருடனும் சமாதானம் செய்து கொள்ள மாட்டோம்.

லோக்பால் மசோதா விவகாரம் தொடர்பாக அரசு தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்த நாங்கள் தயாராக உள்ளோம். ஆனால் எங்களுக்கு அழைப்பு எதுவும் வரவில்லை. ஊழல், ஏழ்மை மற்றும் எழுத்தறிவின்மையால் நமக்கு முழுமையான சுதந்திரம் கிடைக்கவில்லை எனவே, இதை உணர்த்தும் வகையில் எதிர்வரும் 15 ஆம் திகதி இரவு 8 மணி முதல் ஒன்பது மணிவரை நாட்டு மக்கள் அனைவரும் மின் விளக்குகளை அணைத்து விட்டு தீப ஒளி ஏற்ற வேண்டும். என கெஜ்ரிவால் கூறினார். (4-2)

# கிளிநொச்சியிலுள்ள வீடொன்றில் புகுந்த ஆயுததாரிகள் சரமாரித் தாக்குதல்

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவில் கூரிய ஆயுதங்கள் சகிதம் வீட்டினுள் நுழைந்த 6 பேர் கொண்ட குழுவினர் அங்கு இருந்தவர்களைத் தாறுமாறாக வெட்டியதில் 5 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விசுவமடு கண்ணகி நகர் என்னும் கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் கந்தையா சரவணமுத்து (வயது-77), சரவணமுத்து செல்லம்மா (வயது-67), என். கோசலாதேவி (வயது- 52), சரவணமுத்து சதீஸ்வரன் (வயது-34), பிரபாகரன் ஜெயவதனி (வயது-32) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்களில் சதீஸ்வரன், கோசலா தேவி ஆகியோர் யாழ். போதனா வைத்தியசாலையிலும் ஏனைய மூவரும் கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஜெயவதனிக்கும் அவரது கணவனான பிரபாகரனுக்கும் இடையில் ஏற்பட்ட குடும்ப தகராறு காரணமாக மேற்படி சம்பவம் இடம் பெற்றதாக குறிப் பிடப்படுகின்றது.

(ஸ்ரீ-2-6)

# தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையின் பயிற்சி நிலையங்கள்

## கிளிநொச்சி, முல்லைத்தீவில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் பயிற்சி நிலையங்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கமைய இன்று சனிக்கிழமை முல்லைத்தீவில் காலை 9.45 மணிக்கும் கிளிநொச்சியில் பிற்பகல் 1.30 மணிக்கும் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதேவேளை ஜெயபுரம் பயிற்சி நிலையமானது இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு ஜெயபுரத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி நிகழ்வுகளில் நோர்வே நாட்டின் பதில் உயர்ஸ்தானிகர் ஜொன் ஒட்டோ புறுட்ஹொட், இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்திப் பிரதி அமைச்சர் துமிந்த திசாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(ஸ்ரீ-2)

# வவுனியா நகர எல்லைக்குள் உள்ள ஆலைகளை வெளியேற்ற கோரிக்கை

(கொழும்பு)

வவுனியா நகர எல்லைக்குள் அமைந்திருக்கும் அரிசி ஆலைகள், கல் உடைக்கும் ஆலை, சீமெந்து களஞ்சியம் ஆகியவற்றை நகருக்கு வெளியே மாற்றவோ அல்லது தூசிகள் வெளியேறாமல் நவீன முறையில் இயங்க வைக்கவோ ஆவன செய்யுமாறு சமூக ஒற்றுமைக்கான மக்கள் பேரவை மாவட்ட அரச அதிபரை கேட்டுள்ளது.

பேரவை அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பல வருடங்களுக்கு முன்னர் மக்கள் குடியிருப்பு குறைவாகவே இருந்து காலப்போக்கில் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாகவும் நகரை அண்டி மக்கள் வாழ்வை தேட முன்வந்ததன் காரணமாகவும் தற்போது மக்கள் தொகை வெகுவாக அதிகரித்துவிட்டது.

இப்படியான நிலையிலும் ஆலைகள் நகருக்கு மிக அண்மையாக இருப்பதினால் இவைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர், தூசி, சத்தம் ஆகியவைகளினால் தொற்று நோய்கள், சுவாசம் தொடர்பான கோளாறுகள், பிள்ளைகள் படிக்க முடியாமை, பாதைகள் விரைவாக பழுதடைதல், மின்சார சீர்குலைவுகள் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது.

சில இடங்களில் வீதியால் பயணிப்போர் அரிசி ஆலை தூசியினால் பல விதத்திலும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

குடியிருக்கும் மக்களைப் பாதிக்காத வண்ணம் மாற்றங்களை செய்யுமாறு பேரவை அரச அதிபரை கடிதம் மூலம் கேட்டுள்ளது.

இதன் பிரதிகள் வவுனியா நகர சபைத் தலைவர், நீர்ப்பாசன பொறியியலாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் சீனாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட போது தலைநகர் பீஜிங்கில் பிரதமர் வென்ஜியாபோவைச் சந்தித்து உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# விண்ணப்பம் கோரல்கள்

(யாழ்ப்பாணம்)

அலுவலக அலுவல் உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பின் தொழிலாளர் பதவிகளுக்கு 20 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து தேர்தல்கள் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 18-45 வயதிற்கு இடைப்பட்டவர்களாக இருப்பதோடு கல்வித் தகைமைகளாக க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே தடவையில் ஆறுபாடங்களுக்கு குறையாது இரண்டு திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். தாய்மொழி மற்றும் கணிதத்தில் சித்திபெற்றிருந்தால் விசேட தகைமையாகப் கருதப்படும்.

எனவே விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை **தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை இராஜகிரிய, 10107** எனும் முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

* * * * * *

கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சினால் இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு ஆ தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு் செய்வதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி 18-45 வயதிற்கு இடைப்பட்டவராக இருக்க வேண்டும். அத்தோடு கல்வித் தகைமைகளாக,

இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலை ஒன்றிலிருந்து வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பதோடு க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களுள் இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானப் பாடங்கள் மூன்றில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது மொழி அல்லது இலக்கியம் மற்றும் எண்கணிதம் அல்லது கணிதப் பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்கு சமமானதோர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை **பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களம், த.பெ.இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை** என்னும் முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை** என தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

* * * * * *

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் 2011/2013 ஆம் கல்வியாண்டில் இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலையில் அனுமதி பெறுவதற்கான போட்டிப்பரீட்சைக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பமுடிவுத் திகதியன்று விண்ணப்பதாரர் 17-25 வயதிற்கு இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இதற்கான கல்வித் தகைமைகளாக தாய்மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற பாடங்கள் மூன்றில் கட்டாயமாகத் திறமைச் சித்தியும் சமூகக் கல்வி அல்லது விவசாயம் போன்ற பாடங்கள் இரண்டில் ஒன்றிற்காவது திறமைச்சித்தியுடன் இரு தடவைக்கு மேற்படாத வகையில் 6 பாடங்களுடன் க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இங்கு ஒரே தடவையில் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது 5 பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்தோடு க.பொ.த. (உ/த) பரீட்சையில் உயிரியல், விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு தாவரவியல், இரசாயனவியல், பௌதீக விஞ்ஞானம், கால்நடை விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மூன்றிலாவது ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த. (உ/த) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு தாவரவியல், இரசாயனவியல், பௌதீக விஞ்ஞானம், கால்நடை விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆங்கில மொழியில் இக் கற்கை நெறியினைத் தொடர விரும்பும் விண்ணப்பதாரர் க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றிருப்பதோடு க.பொ.த.(உ/த) தில் ஆங்கிலம் சித்தியடைந்திருப்பது அவசியம்.

எனவே, விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை **பணிப்பாளர் (மனித வள அபிவிருத்தி, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், த.பெ.இல 13, பேராதனை** எனும் முகவரிக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

இவ் விண்ணப்பம் கோரல்கள் பற்றிய மேலதிக விபரங்களை நேற்று வெளியாகிய வர்த்தமானியிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்திற்கு நேரில் வந்தோ பார்வையிட முடியும்.

(ஸ்ரீ-4)

# கொரியமொழிப் பரீட்சை விண்ணப்ப படிவங்களுக்கு தட்டுப்பாடில்லை

## வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கொரிய மொழிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களுக்குத் தட்டுப்பாடு இல்லை எனவும் போதியளவு கைவசம் இருப்பதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் எவரும் பதற்றமடையத் தேவையில்லை என அமைச்சின் செயலாளர் கேணல் நிஸங்க விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

கொரியாவில் வேலைவாய்ப்புக்கான மொழிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெறுவதற்கு பெரும் எண்ணிக்கையிலானோர் ஒரேநேரத்தில் முன்வந்தால் களேபரம் ஏற்பட்டதைச் சுட்டிக்காட்டியே அவர் இவ்வாறு கூறினார்.

29 நிலையங்களின் ஊடாக அவை விநியோகிக்கப்படும் எனவும் எனவே எவரும் பதற்றமடைய தேவையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# லண்டனில் வன்முறைகளில் ஈடுபட்ட ஆயிரத்து 300 கலவரக்காரர்கள் கைது

லண்டன் மாநகரிலும் பிற நகரங்களிலும் நடைபெற்ற கலவரம், வன்முறை, கடை உடைப்பு, தீயிடல் சம்பவங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் வரை ஆயிரத்து 300 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த கைதுகள் தொடரும் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து நாடாளுமன்றத்தின் சிறப்பு ஒரு நாள் கூட்டத்தில் அவர் உரையாற்று கையில்,

லண்டனிலும் பிற நகரங்களிலும் வன் செயல்களில் ஈடுபடும் கும்பல்கள் கடுமையாக ஒடுக்கப்படும். உலகமே நம்மைப் பார்க்கிறது. வெகு சாதாரணமாகத் தொடங்கிய இந்தக் கலவரம் இப்போது திட்டமிட்டு நடப்பதை அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

பொலிஸாருக்கு இனி அதிக அதிகாரம் தரப்படும். முகத்தை மூடிக்கொண்டு இனி எவரும் தெருவில் நடமாட அனுமதி கிடையாது. ஆயுதங்களை வைத்திருக்கவும் பொது இடங்களில் கூடவும் இனி கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

போதை மருந்து கடத்தலிலும் பிற சட்டவிரோதச் செயல்களிலும் ஈடுபடும் ஆபிரிக்க கரிபிய) இளைஞர்கள்தான் இந்த வன்முறைகளில் பெரும் பங்கு வகித்துள்ளனர். இவர்கள் பேட்டைக்குப் பேட்டை ஒரு தலைவரை தங்களுக்குள் வைத்துக்கொண்டு அவருடைய கட்டளைப்படி சட்டவிரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். இவர்களைக் குறி வைத்து ஒடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரசின் மானியக் குறைப்புகளுக்கும் சிக்கன நடவடிக்கைகளுக்கும் இந்தக் கலவரங்களுக்கும் தொடர்பு ஏதும் இல்லை . இவர்கள் அரசியல் தியாகிகள் அல்லர். கடைகளை உடைத்து கொள்ளை அடிப்பதுதான் இவர்களுடைய நோக்கம்.

சட்டவிரோதமாக ஆயுதங்களைக் கடத்தி விற்கும் கும்பலைச் சேர்ந்தவனைப் பொலிஸார் சுட்டுக்கொன்றதற்குப் பழிவாங்க பொலிஸ் துறைக்கே பாடம் கற்பிக்க புறப்பட்ட சமூக விரோதிகளின் கொடுஞ்செயல்கள் தான் இவை. இவர்களை எப்படி அடக்க வேண்டும் என்று எங்களுக்குத்தெரியும். தேவைப்பட்டால் பொஸ்டனில் இத்தகைய கும்பல்களை எப்படி அடக்கினார்கள் என்று அமெரிக்கப் பொலிஸாரிடம் கேட்டு நடப்போம்.

பெற்றோர் ஒழுங்காக இல்லாத வீட்டுப் பிள்ளைகள்தான் இந்தக் கும்பல்களில் அதிகம் இடம் பெற்றுள்ளனர். பிள்ளைகளைப் பெற்றால் மட்டும் போதாது அவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுத் தந்து வளர்க்க வேண்டும்.

கலவரக்காரர்கள் தங்களுக்குள் திட்டமிடவும் ஒருங்கிணைக்கவும் டுவிட்டர்களையும் பேஸ்புக்களையும் பயன்படுத்தியுள்ளனர். இவற்றின் பயன்பாட்டை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று அரசு தீர்மானிக்கும்.

தங்களை அடக்க யாருமே இல்லை என்று ஒரு சில சமூகவிரோதிகள் தீர்மானித்துவிடக் கூடாது. நாடு என்பது மிகப்பெரியது சட்டம், ஒழுங்கைக்காக்க வேண்டிய அரசு நிர்வாகம் தன்னுடைய முழு வேகத்தைக் காட்ட ஆரம்பித்தால் எந்தவிதமான சமூக விரோதக்கும்பலும் அடங்கித்தான் ஆக வேண்டும்.

ஆபிரிக்க -கரீபிய சமூகத்தவருக்கு எப்போதுமே ஆசிய சமூகத்தவருடன்தான் மோதல்கள் நிகழும் என்றாலும் இந்த முறை 3 ஆசிரியர்களை கார் ஏற்றி இந்த விஷமிகள் கொன்றபோதும் அவர்கள் அமைதி காத்ததால் எளிதில் பொலிஸாரால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முடிந்தது. (ஸ்ரீ-2)

## பிரிட்டனில் நான்கு நாள் கலவரத்தில் 1500 கோடிக்கும் அதிக இழப்பு

(லண்டன்)

லண்டனில் கடந்த நான்கு நாட்களாக தொடர்ந்த கலவரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த நான்கு நாட்களுக்கு முன் லண்டனிலுள்ள டோட்டன் ஹேம் பகுதியைச் சேர்ந்த பிரபல தாதா மார்க் டக்கன் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதையடுத்து அவரது ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர். அப்போது பொலிஸாருக்கும் டக்கன் ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக வெடித்தது. டோட்டன் ஹேம் நகரின் பல இடங்களில் உள்ள வணிகவளாகங்கள் உள்ளிட்டவை தீ வைத்து எரிக்கப்பட்டன.

கடந்த நான்கு நாள் கலவரத்தில் ஆயிரத்து 500 கோடி ரூபாய்க்கும் அதிகமாக பொருட்கள் சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.இதற்கான இழப்பீடு காப்புறுதி நிறுவனங்கள் மூலம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

லண்டனில் நடந்த நான்கு நாள் கலவரத்தில் மூன்று பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டனர். க்ராய்டான் பகுதியில் இந்தியரின் வீடு ஒன்று திக்கிரையாக்கப்பட்டது. அந்தக் குடும்பத்தினர் கைத்தொலைபேசியை தவிர அனைத்தையும் இழந்து விட்டதாக கூறியுள்ளனர். பர்மிங்காம் பகுதியில் உள்ள சீக்கியர்களின் ஏராளமான கடைகள் கலவரத்தின் போது அடித்து நொறுக்கப்பட்டன. இதை தொடர்ந்து சீக்கியர்கள் தங்களிடம் உள்ள குறுவாளையும் ஹொக்கி மட்டைகளையும் ஏந்திக் கொண்டு பாதுகாப்புக்காக நின்றனர் . (ஸ்ரீ-2)







கடந்த சில நாட்களாக இங்கிலாந்தில் கட்டவிழ்த்து வன்முறையை ஒடுக்கும் நடவடிக்கைகள் குறித்து இங்கிலாந்து பாராளுமன்றில் பிரதமர் டேவிட் கமரூன் விவாதத்தில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.

## மனிதக் குரங்கு தாக்கி முகம் சிதைவடைந்தது

### அமெ.பெண்ணுக்கு அறுவைச்சிகிச்சை



அமெரிக்காவில் கனெக்டிக்கட் நகரை சேர்ந்த சார்லா நாஷ் வயது(57) என்ற பெண்ணை பக்கத்து வீட்டுக்காரர் வளர்த்த டிராவிஸ் என்ற மனிதக் குரங்கு கடந்த 2009 ஆம் ஆண்டு கடித்து குதறியது. அதில் அவரது மூக்கு, உதடு, கண் இமைகள் ஆகிய முகத்தின் அனைத்து பாகங்களும் சேதம் அடைந்தன. முகம் முழுவதும் சிதைந்து கோரமானது.

அதைத்தொடர்ந்து அந்த மனித குரங்கு பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டது. எனவே அவரை பாஸ்டனில் உள்ள பரிகாம் பெண்கள் வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு முகமாற்று அறுவை சிகிச்சை நடந்தது.

இதைத்தொடர்ந்து அவரது முகம் சீரமைக்கப்பட்டு புதுப்பொலிவு பெற்றது. 2 ஆண்டுகளுக்கு பிறகு தனக்கு ஒரு புதிய முகம் கிடைத்தது குறித்து நாஷ் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். தனக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள் மற்றும் தாதிமாருக்கு நன்றி தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## எதிரிகளை சில நிமிடங்களில் வீழ்த்தும் ஏவுகணை தயாராகிறது

(லண்டன்)

உலகின் எந்த மூலையானாலும் ஏவுகணைகளை விட வேகமாகச் சென்றடையக் கூடிய வானூர்தி தொழில்நுட்பத்தை அமெரிக்கா தயாரித்திருக்கிறது. இந்த முன்னணி திறன் கொண்ட வாகனத்திற்கு பால்கன் எச்டிவி -2என பெயரிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்க இராணுவ ஆராய்ச்சி மையு விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட பால்கன் எச்டிவி -2 என்ற ஆளில்லாமல் பறக்கக் கூடிய ஏவுகணை போர் விமானம் 21 ஆயிரத்து 580 கி.மீ வேகத்தில் செல்லக்கூடியது.


ஆயிரத்து 386 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் போர் விமானம் கடந்த ஏப்ரல் மாதம் சோதனை ரீதியாக இயக்கப்பட்டு தோல்வியடைந்தது. பொதுவாக சுப்பர் சொனிக் என்பது ஒலியை விட வேகமாகச் செல்லும் வானூர்தி ஆகும். ஆனால் இது ஹபர் சானிக் என்றழைக்கப்படுகிறது.

ஒலியை விட ஐந்து மடங்கு வேகம் கொண்டது. அமெரிக்காவின் இந்த ஹபர் சானிக் தொழில்நுட்பம் முழு வெற்றி பெற்றால் விண்வெளியில் பயணம் என்பது மேலும் எளிதாகும். அத்துடன் அதிநவீன ஏவுகணை தொழில்நுட்பமும் மேலும் வலுப் பெறும்.

முரண்டு பிடிக்கும் எதிரி நாடுகளை தன் ஏவுகணைகளால் சில நிமிடங்களில் பணிய வைத்து விடும். கலிபோர்னியாவின் வாண்டன்பர்க் விமானப்படை தளத்திலிருந்து மினோடார் என்ற இராணுவ ரொக்கெட் மூலம் பால்கன் விண்ணில் ஏவி பரிசோதிக்கப்படுகிறது.

ஒரு தொன் எடை கொண்ட அணு குண்டை ஏந்திச் செல்லும் திறன் வாய்ந்த இச் சோதனை முழு வெற்றி பெற்றால் வரும் 2025 ஆண்டு இந்த பால்கன் வாகனம் பயன்பாட்டிற்கு வரும்.

(ஸ்ரீ-2)




அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில் லோவா நகருக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட குடியரசுக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் மிட் ரோம்னியைப் படத்தில் காணலாம்.

உழைப்பாளியின் வியர்வை உலரும் முன் கூலியைக் கொடுத்து விடு என்றால் இன்று கொடுப்பவனுக்கே வியர்க்கின்றது. -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கூலி நிர்ணயத்தை தீர்மானிப்பது யார்?

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நுகர்வோரைப் பாதுகாக்கிறதோ இல்லையோ அது பாதுகாப்பாக பெட்டகத்தில் இருக்கிறது என்பதை யாழ். குடாநாட்டில் நிலவும் விலை மற்றும் கூலிகளின் கட்டற்ற போக்கு உணர்த்தி நிற்கிறது.

தனியார் மருத்துவமனைகளில் மாத்திரைகளுக்கு அறவிடும் கட்டணம் முதல் கட்டிடத் தொழிலில் ஈடுபடுவோர் அறவிடுகின்ற கூலி வரை எல்லாமும் எல்லை மீறிச் செல்கின்றன.

வைத்திய நிபுணர் சேவையை வழங்குகின்ற பல தனியார் நிறுவனங்கள் மாத்திரைக்கான கட்டணத்தை கண்டபாட்டில் அறவிடுகின்றன.

அதாவது, ஐந்து நட்சத்திர ஹோட்டலில் பால் தேநீர் அருந்துவதற்கு அறவிடப்படும் கட்டணத்திற்கு ஈடாக இதுவும் அமைந்துள்ளது.

இருந்தும் அங்கு வைத்திய ஆலோசனை வழங்கும் மருத்துவ நிபுணர்கள், இது பற்றி எதுவும் அலட்டிக்கொள்வதில்லை.

யாழ்.குடாநாட்டில் உள்ள அத்தனை தனியார் வைத்திய ஆலோசனை நிறுவனங்களினதும் இயங்குகை மருத்துவ நிபுணர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

எனவே மருத்துவ நிபுணர்கள் இது விடயத்தில் பொதுமக்களின் நலன்பற்றி சிறிது சிந்தித்தாலும் இத்தகைய உயர்ந்த கட்டண அறவீட்டை தடுக்க முடியும். எனினும் அது நடப்பதாக இல்லை.

இது ஒரு புறம்; இன்னொரு புறத்தில் கட்டிடத் தொழிலாளர்கள் மற்றும் கூலியாட்கள் தமது நாளாந்த வேலை தொடர்பில் நிர்ணயிக்கின்ற கூலியின் தொகையைக் கேட்டால் தலை சுற்றும்.

யாழ்ப்பாணத்தில் சலரோகமும்-உயர் இரத்த அழுத்தமும் அதிகளவில் ஏற்படுவதற்கு கூலியின் மோசமான அதிகரிப்புத்தான் காரணமோ என்று நினைக்கும் அளவுக்கு நிலைமை உள்ளது.

நேற்று முன்தினம் ஒரு மேசன் தொழிலாளியின் கூலி தொளாயிரம் ரூபாய். அதே நபரின் நேற்றைய கூலி ஆயிரம் ரூபாய். இன்று ஆயிரத்து நூறு. நாளை ஆயிரத்து ஐந்நூறு. இப்படியாக கூலி இமயமலை உச்சியை தொடுவதற்கு துடிக்கிறது.

என்ன செய்வது கட்டிய வீட்டை எங்கள் ஆட்சி விமானங்கள் நொறுக்கிவிட்டன.

இப்போது வீட்டுத்திட்டம், கூலியின் வேகத்தில் வீட்டுத் திட்டம் வெறும் திட்டமாகவே இருக்கிறது. நாம் என்ன செய்ய முடியும்?

கேட்பார் இல்லையென்றால் எல்லாம் இப்படித் தான்...

# திண்ணபுர அந்தாதி (மூலமும் உரையும்)

**திண்ணபுர அந்தாதி நூல் நல்லூர் சிவன் கோயிலில் இன்று வெளியிடப்படவுள்ளது. அதனை ஒட்டி இவ் விமர்சனம் பிரசுரமாகின்றது.**

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோயிற் பதியினைத் **திண்ணபுரம்** என்றும் அழைப்பது மரபு.

மூர்த்தி,தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறப்புற்ற இத் திண்ணபுரப் பெருமான் மீது பத்தொன்பதாம் நூற்றாண்டில் காரைநகரில் வாழ்ந்த கார்த்திகேயப் புலவர் எழுதிய பல நூல்களுள் **திண்ணபுர அந்தாதி** என்ற நூலும் ஒன்று.

அந்தாதி என்பது ஒரு பாட்டின் அந்தம். அதைத் தொடர்ந்து வரும் அடுத்த பாட்டின் ஆதியாக அமைவது. இவ்வாறு அமைவது மட்டுமன்றி நூறாவது பாடலின் இறுதி முதலாம் பாடலின் ஆதியாகவும் வரும். இவ் வந்தாதிப் பாக்கள் யாவும் கட்டளைக் கலித்துறையாக அமையும்.


கார்த்திகேயப் புலவர் பாடிய திண்ணபுர அந்தாதியினை ஏட்டில் இருந்த நிலையில் இருந்து முதன்முதல் மூலம் மட்டும் காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழக சார்பில் காரைநகர் மூதறிஞர் சிவத்தமிழ் வித்தகர் சிவத்திரு இலக்கிய கலாநிதி க.வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களால் பதிப்பித்து வெளியிடப் பட்டது. பின்னர் குருக்கள் அவர்களின் வேண்டுகோட்படி மூலமும் உரையுமாக இரத்தாட்சி மார்கழி 1985 ஜனவரியில் மேற்படி கழகம் சார்பில் திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீ குமரகுருபரர் அச்சகத்தில் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டது.

இத் திருப்பெற்றி வாய்ந்த திண்ணபுர அந்தாதி உரைப் பிரதிகள் வேண்டுவோர்க்கு இற்றை ஞான்று கிடைத்தற் கருமையால் கனடா சைவ சித்தாந்த மன்றத் தலைவர் **அன்புநெறி** நிர்வாக ஆசிரியர் சிவநெறிச் செல்வர் விஸ்வலிங்கம் அவர்களும் **அன்புநெறி** ஆசிரியர் திருமதி வ.விஸ்வலிங்கம் அவர்களும் பதிப்பாசிரியர்களாக இணைந்து குருக்கள் அவர்களின் ஆசீர் வாதத்துடன் அதன் மூன்றாம் பதிப்பினை கனடா சைவ சித்தாந்த மன்ற வெளியீடாக ஜூன் 2011 ஆம் ஆண்டு **திண்ணபுர அந்தாதி** (செஞ்சொல் விளக்கம் என்ற உரையுடன்) வெளியிட்டுள்ளது.

### நூல் விமர்சனம்

இம்மூன்றாம் பதிப்பில் விசேடமாக பதிப்புரையினை கனடா சைவ சித்தாந்த மன்றத்தின் தலைவர் திரு.விஸ்வலிங்கம் அவர்களும் சிறந்ததொரு அணிந்துரையினை பேராசிரியர் நா.சுப்பிரமணியன் அவர்களும் **திண்ணபுர அந்தாதி - ஓர் பார்வை** என்ற தலைப்பில் காத்திரமான கட்டுரையை பேரறிஞர் முருகவே.பரமநாதன் அவர்களும் எழுதியுள்ளனர்.

ஆவணப்படுத்திப் போற்றத்தக்க ஈழத்தின் சைவத் தமிழ் நூலாகிய திண்ணபுர அந்தாதியின் ஆசிரியர் காரைநகர் கார்த்திகேயப் புலவரினதும் சிவத்திரு க.வைத்தீஸ்வரக்குருக்கள் அவர்களினதும் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி



மடம் அதிபர் சிவஸ்ரீ சுவாமிகளினதும் செஞ்சொற் கொண்டல் டாக்டர் சொ.சிங்கார வேலனதும் நிழற்படங்களும் இம் மூன்றாம் பதிப்பில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

கனடா சைவசித்தாந்த மன்ற வெளியீடாக விளங்கும் திண்ணபுர அந்தாதி

**சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் மு.திருஞானசம்பந்தபிள்ளை**

(மூலமும் உரையும்) முன்முகப்பட்டையில் சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமந் நடராஜப் பெருமானின் திருவுருவமும் பின்புற அட்டையில் திண்ணபுர ஆலயத்தின் முன்புற நுழைவாயில்களான ஐயனார், சிவன் சந்நிதி இராஜ கோபுரங்களின் காட்சியும் அமைந்திருப்பது புறக்காட்சிக்கு அழகினையும் உட்காட்சிக்கு சிவ சிந்தனையையும் ஊற்றெடுக்கச் செய்கின்றது.

# சுதந்திர தமிழீழத்திற்கான வாக்கெடுப்பை நடத்தக்கோரி வைகோ நேற்று ஆர்ப்பாட்டம்

## டெல்லியில் திரண்ட ம.தி.மு.கவினர்

சுதந்திரத் தமிழ் ஈழ தேசத்திற்கான பொது வாக்கெடுப்பை அனைத்து உலக பார்வையாளர்கள் கண்காணிப்பில் நடத்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டெல்லியில் நாடாளுமன்றம் முன்பு வைகோ தலைமையில் ம.தி.மு.கவினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதுவரை இலங்கைக்கு ஆதாரவாக செயற்பட்டு வந்த இந்தியரசு தன் துரோகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு இப்போதாவது ஐ.நா. மன்றத்திலும் மனித உரிமைகள் பேரவையிலும் சிங்கள அரசுக்கு எதிர் நிலையை எடுப்பதற்கு முன்வரவேண்டும்.

இலங்கையில் தமிழர் தாயகப் பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தையும் பொலிஸாரையும் உடனடியாக அகற்றவும் சிங்கள குடியேற்றங்களைத் தடுப்பதோடு பல வந்தமாக குடியேறியவர்களை வெளியேற்றவும் இந்திய அரசும் உலக நாடுகளும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு சுதந்திரத் தமிழ் ஈழ தேசம் மட்டுமே தீர்வாக முடியும் என்பதால் அதற்கான பொது வாக்கெடுப்பை அனைத்து உலக பார்வையாளர்கள் கண்காணிப்பில் நடத்துவதற்கும் அந்த வாக்கெடுப்பில் உலகின் பல நாடுகளில் உள்ள புலம் பெயர்ந்த ஈழத்தழிழர்கள் அந்தந்த நாடுகளிலேயே அந்த வாக் கெடுப்பில் பங்கேற்கவுமான நடவடிக் கைகளை ஐ.நா.மன்றம் முன்னெடுப்பதற்குமான கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வைகோ தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் யஷ்வந்த்சின்ஹா, ராம்விலாஸ் பஸ்வான் உள்ளிட்ட பல்வேறு கட்சி தலைவர்கள் பங்கேற்று உரை நிகழ்த்தினர். (ஸ்ரீ-4-2)

# போலி விசாவுடன் சென்ற ஐவர் கைது

போலியான கடவுச்சீட்டுக்கள் மற்றும் விசா என்பனவற்றுடன் இத்தாலி செல்ல முயற்சித்த 5 இளைஞர்கள் கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு சட்டவிரோத போலி ஆவணங்களைத் தயாரித்து வழங்கியதாகக் கருதப்படும் இருவரும் கைதானவர்களில் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் இவர்களது கடவுச் சீட்டினை பரிசோதனை செய்தபோது போலியானவை என்பதைக் கண்டறிந்தவுடன் இவர்கள் 5 பேரையும் கைது செய்தனர். (எ-5)


# கலைப்பீட மீள் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கலைப்பீடத்தில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் பயின்று (Semester System) தமது பட்டப்படிப்பை இதுவரை பூர்த்தி செய்யாதுள்ள மாணவர்களுக்கு (கலை, இராமநாதன் நுண்கலைக் கழகம்) முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட இரு அரையாண்டுகளுக்குமான (semester1&2) விசேட மீள் பரீட்சைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை முதல் நடைபெறவுள்ளதாக பீடாதிபதி க.ஞானகுமரன் அறிவித்துள்ளார். (சு)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## உழைக்கும் கைகள் வேண்டும்



கடவுள் பிரம்மாண்டமான வட்டம் போன்றவர். அந்த வட்டத்தின் சுற்றளவுப் பகுதியான பரிதி எங்கும் கிடையாது. ஆனால் அந்த வட்டத்தின் மையம் அனைத்து இடங்களிலும் உள்ளது.


எதையும் பரபரப்புடன் செயற்படுத்தக் கூடாது. மாறாக தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இம்மூன்றும் வெற்றிக்கு தேவை.

நீ ஏற்கனவே தீர்க்கதரிசியாகத் தான் இருக்கிறாய். ஆனால் அதை அறியாமல் இருக்கிறாய். இதை நீ உணரவேண்டும்.

ஆன்மீக வாழ்வுக்கோ, மனதுக்கோ, உடலுக்கோ பலவீனத்தை உண்டு பண்ணும் எதையும் உன் கால் விரலால் கூட தீண்டாதே. மனிதனிடம் இயற்கையாக புதைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதே சமய வாழ்க்கை.

இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக் கூடிய கைகள் நமக்குத் தேவை.

எல்லா பேய்களும் நம் மனதில் தான் இருக்கின்றன. மனம் கட்டுப்பட்டு அடங்கியிருந்தால் எந்த இடத்தில் நாம் இருந்தாலும் எங்கிருந்தாலும் அது சொர்க்கமாக மாறிவிடும்.


வடமாகாண விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ள விவசாயக் கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் விவசாய திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதி விவசாய பணிப்பாளர் எஸ். சிவகுமார் கண்காட்சி தொடர்பாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பதையும் விவசாயப் பண்ணையை ஆளுநர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினர் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# நீர் நிரம்பிய கிடங்கினுள் வீழ்ந்த குழந்தை பரிதாபமாக உயிரிழப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட ஐயங்கன் குளம் கிராமத்தில் மிளகாய் கன்றுகளுக்கு நீர் ஊற்றுவதற்கு நீரினைத் தேக்கி வைப்பதற்காக வெட்டப்பட்ட கிடங்கினுள் தவறுதலாக வீழ்ந்து இரண்டரை வயது நிரம்பிய குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இச்சம்பவம் கடந்த 10 ஆம் திகதி காலையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது , பெற்றோர் வேலையில் ஈடுபட்டிருந்த வேளையில் தர்மராசா டேசினி என்ற குழந்தை வீட்டின் பின்புறமாக சென்று அங்கு வெட்டப்பட்டிருந்த நான்கு அடி ஆழமான நீர்நிரம்பிய கிடங்கில் தவறுதலாக விழுந்துள்ளது.

இதனை அறியாத பெற்றோர் குழந் தையை காணவில்லை என பல மணிநேரம் தேடி அலைந்துள்ளனர்.

பின்னர் பல மணிநேரம் கழித்து மேற்படி குழியினுள் சென்று பார்த்தபோது குழந்தை இறந்தநிலையில் கண்டெடுக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக மல்லாவி பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மல்லாவி வைத்தியசாலைக்கு குழந்தையின் சடலத்தை எடுத்துச் சென்று ஒப்படைத்துள்ளனர்.

மல்லாவி வைத்திய அதிகாரி மேற்கொண்ட பிரேத பரிசோதனையில் குழந்தையின் சுவாசப்பையினுள் நீர் சென்று மூச்சுத் திணறல் ஏற்பட்டு மரணம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் குழந்தையின் சடலம் பெற்றோரிடம் அன்றிரவே ஒப்படைக்கப் பட்டது.

(ஸ்ரீ-2-15)

# வாழைச்சேனை சம்பவம் தொடர்பாக விசேட பொலிஸ் குழு விசாரணை

(கொழும்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவொன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின் பேரில் இந்த விசாரணை மேற்கொள்ளப்படுவதாக மட்டக்களப்பு மற்றும் அம்பாறை பிரதேசங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் திலக் விஜேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் விசேட பொலிஸ் குழுவொன்றும் இது தொடர்பிலான விசாரணைகளை கொண்டுள்ளது.

பெண்களுக்கு தொல்லை கொடுத்ததாக கூறப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போது அவருக்கு தண்டனை வழங்குவதற்கு தம்மிடம் ஒப்படைக்குமாறு பிரதேச மக்கள் பொலிஸாருக்கு அழுத்தம் கொடுத்ததை அடுத்து நேற்று முன்தினம் அமைதியின்மை ஏற்பட்டது.

பிரதேச மக்கள் இதன் போது பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதுடன் வாகனங்கள் சிலவற்றையும் சேதமாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த சந்தேக நபரும் பொலிஸ் அதிகாரிகளும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் ஏற்பட்ட அமைதியின்மை முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இந்திய மீனவரின் சடலம் அடையாளம் காணப்பட்டது

மன்னார், சௌத்பார் பிரதேசத்தில் கடந்த 2ஆம் திகதி கரையொதுங்கிய இந்திய மீனவரது சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அவர் தமிழகம் நாகர்கோவில், மேல் முற்றத்தை சேர்ந்த வீன் அந்தோனி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டாம் திகதி சடலம் கரை ஒதுங்கியதைத் தொடர்ந்து இது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகரகத்துக்கு அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் இந்திய உயர்ஸ்தானிகரகத்தின், யாழ்ப்பாண பிராந்திய கிளையின் அதிகாரி வினோத் சர்மாவின் ஏற்பாட்டில் அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவரது சடலத்தை கடற்படையினரின் உதவியுடன் தமிழகத்தில் இருந்து வந்த அவரின் உறவினர்கள், தலைமன்னாரில் வைத்து பொறுப்பேற்றனர்.

சடலமாக மீட்கப்பட்டவர், கடந்த ஜூலை மாதம் 20 ஆம் திகதி தொழிலுக்கு சென்ற போது முதல் காணாமல் போயிருந்ததாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# ஸ்ரீபத்மாவதி அம்மாவின் 57ஆவது ஜென்மதினம்

ஸ்ரீ கல்கி பகவான் ஸ்ரீ பத்மாவதி அம்மாவின் 57ஆவது ஜென்மதின நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பக்தர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ

# மாணவர்களின் போஷாக்கு நிலைமை குறித்து பாராளுமன்றில் விவாதம்

பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவை வழங்குவது மற்றும் அவர்களது போஷாக்கு நிலைமை தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

மாணவர்களுக்கு பகல் உணவை விநியோகிப்பவர்களுக்கு உரிய முறையில் கட்டணங்கள் செலுத்தப்படாமைக்கான காரணம் என்னவென ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் குமார சபையில் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த பிரதி கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா திறைசேரியிடமிருந்து கிடைக்கும் நிதிக்கு அமையவே அந்த கட்டணங்கள் செலுத்தப்படுவதாக சுட்டிக்காட்டினார். (ஸ்ரீ-2)

# விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்

## ஐரோப்பிய நீதிமன்றில் வாதம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை நீக்க வேண்டுமென அவ்வமைப்பின் சார்பில் ஆஜரான நெதர்லாந்து சட்டத்தரணியொருவர் ஐரோப்பிய நீதிமன்றத்தை கோரியுள்ளார்.

புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத பட்டியலில் இணைத்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்தை இரத்துச் செய்ய வேண்டுமென சட்டத்தரணி விக்டர் கோப் கோரினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மேற்படி தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு இனியும் இல்லை. தனது அரசியல் இலக்கை அடைவதற்கு இராணுவ தந்தி ரோபாயத்தை பயன்படுத்துவதில்லை என அவ்வமைப்பு பிரகடனப்படுத்தியுள்ளது என அவர் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இத்தடை சட்டரீதியாக தவறானது எனவும் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்துவது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான உரிமையை நாடுவதற்கு ஏமாற்றமளிக்கிறது என்பதால் அது சர்வதேச சட்டத்திற்கு முரணானது எனவும் கோப் வாதாடினார்.

தமிழ் குழுக்கள் சுயநிர்ணய உரிமைக்காக நியாயபூர்வமாக போராடுகின்றனர். எமது பிரதான வாதங்களில் ஒன்று என்னவென்றால் சுயநிர்ணய உரிமை என்பது சர்வதேச சட்டத்தின் அடிப்படை கொள்கைகளில் ஒன்றாகும்.

இது இரு தரப்புக்கள் ஒன்றுடனொன்று போரிடும் ஆயுத மோதலாகும். வெளிப்படையாக தவறான விடயங்கள் நடந்துள்ளன. ஆனால் புலிகள் சண்டையிடும் இரு தரப்புக்களில் ஒன்று என்று அல்லாமல் ஒரு பயங்கரவாத அமைப்பென அழைப்பது எமது எண்ணத்தின் படி சர்வதேச சட்டத்திற்கு முரணானதாகும் எனவும் விக்டோரியா கோப் கூறினார். (ஸ்ரீ-2)



செலிங்கோ லைவ் நெல்லியடி கிளையின் வாடிக்கையாளரான அச்சுவேலியைச் சேர்ந்த வி.ஞானராஜ் என்பவர் அண்மையில் திடீர் மரணமடைந்ததையடுத்து அவருடைய இழப்பீட்டுத் தொகையான 10 இலட்சத்து 60 ஆயிரத்து அறுநூற்று நாற்பது ரூபா பெறுமதியான காசோலையை நெல்லியடி கிளையின் அபிவிருத்தி முகாமையாளர் து.நிறோஜன் இறந்தவரின் மனைவியான ஞா. சந்திராதேவியிடம் கையளிப்பதனையும் அருகில் கிளை முகாமையாளர் வி.பாஸ்கரன், விற்பனை நிறைவேற்று அதிகாரிகளான எஸ். சுஜந்தன், ரி. இராஜகோபால், விற்பனை ஆலோசகர் யோகராஜா ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம்:- பொலிகண்டி நிருபர்)



அனலைதீவு ஐயனார் ஆலய தேர்த் திருவிழாக் காட்சிகள்...

# விடோரியிடம் வீழ்ந்தது பங்களாதேஷ்

# சிம்பாவே அணி அசத்தல் வெற்றி



(ஹராரே)

விடோரி,சிபண்டாவின் அபார ஆட்டத்தின் மூலம் சிம்பாவே அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

சிம்பாவேக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி ஒரேயொரு டெஸ்ட்,5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் போட்டியில் சிம்பாவே வெற்றிபெற்ற நிலையில் முதலாவது ஒரு நாள் போட்டி நேற்று ஹராரேயில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாவே அணித்தலைவர் ரெய்லர் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய பங்களாதேஷ் அணி விடோரியின் துல்லியமான பந்து வீச்சில் சிக்கி 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 184 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முஸ்பீகர் ரகீம் 91 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 59 ஓட்டங்களையும் அணித்தலைவர் சகிப் அல் ஹசன் 63 பந்துகளில்( 2 பவுண்டரிகள் உட்பட) 53 ஓட்டங்களையும் எடுத்தனர்.

ஒரு கட்டத்தில் 17 ஓவர்களில் 43 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து திணறிய பங்களாதேஷ் அணியை மீட்டனர்.

பந்துவீச்சில் விடோரி 10 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்டுகளையும் சிகும்புரா, உற்சயா, பிரைஸ், மஷகட்ஷா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி சிபன்டாவின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 41.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 186 ஓட்டங்களைக்குவித்து 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் சிபண்டா 102 பந்துகளில் ( 8 பவுண்டரிகள், 2 சிக்சர்கள் உட்பட)96 ஓட்டங்களையும் மஷகட்ஷா 41 ஓட்டங்களையும் எடுத்தனர்


பந்துவீச்சில் ருபேல் ஹுசைன் 4 விக்கெட்டுக்களையும்,சகிப் அல் ஹசன் 1விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ்வெற்றியின் மூலம் சிம்பாவே அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இப்போட்டியில் சிம்பாவே அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த விடோரி ஆட்ட நாயகனாக தெரிவானார்.

# ரோஜர் கிண்ண டெனிஸ்

# செரினா காலிறுதிக்கு தகுதி



ரோஜர் கிண்ண டெனிஸ் தொடரில் காலிறுதிக்கு அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் முன்னேறினார்.

ரோஜர் கிண்ண டெனிஸ் தொடர் கனடாவின் டொரன்டோ நகரில் நடக்கிறது. இதன் மூன்றாம் சுற்றில் அமெரிக்காவின் செரீனா , ஜிஜெங்கை சந்தித்தார். இதில் முதல் செட்டை 4-6 என இழந்த செரினா பின் எழுச்சி பெற்று

இரண்டாவது மற்றும் மூன்றாவது செட்டைக் கைப்பற்றினார்.

இதன் முலம் செரினா 4-6,6-3,6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு போட்டியில் ரஷ்யாவின் ஷரபோவா, சக வீராங்கனை கலீனாவிடம் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

# ஐ.சி.சியின் மூன்று விருதுகளுக்கு சங்கக்காரவின் பெயர் பரிந்துரை

சர்வதேச கிரிக்கெட் சபையின் மூன்று விருதுகளுக்கு இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) விருதுகளுக்கான நீண்ட பெயர்ப் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கையின் குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, லசித் மலிங்க ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இவர்களுள் குமார் சங்கக்காரவின் பெயர் மூன்று விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர், சிறந்த ஒருநாள் வீரர், ஆண்டின் மக்கள் தேர்வு விருது ஆகிய மூன்று விருதுகளுக்கு சங்கக்கார போட்டியிடுகிறார்.

அத்துடன் ஆண்டின் சிறந்த ஒருநாள் வீரர் விருதுக்காக மஹேல ஜெயவர்த்தன, லசித் மலிங்க ஆகியோரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி. ஆண்டு விருதுகளுக்கான வீரர்கள் கடந்த 2010 ஆகஸ்ட் 11 ஆம் திகதி முதல் 2011 ஆகஸ்ட் 02 ஆம் திகதி வரை யான காலப்பிரிவில் கிரிக்கெட் அரங்கில் சோபித்தோருக்கு வழங்கப்படவுள்ளது. இந்த விருதுவிழா எதிர் வரும் செப்டெம்பர் 12 ஆம் திகதி லண்டனில் நடைபெறவுள்ளது.

இதில் 10 பிரிவுகளில் தனிப்பட்டோருக்கு விருது வழங்கப்படவுள்ளது. இவ் விருது களில் மக்கள் தேர்வு விருதும் அடங்கும். அத்துடன் சிறந்த டெஸ்ட், ஒருநாள், மற்றும் கிரிக்கெட் உணர்வை வெளிக்காட்டிய அணிகளுக்கு விருது வழங்கப்படவுள்ளது.

இதேவேளை நடுவருக்கான விருதில் இலங்கையின் குமார் தர்மசேனவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# இளையோர் கால்பந்து உலகக்கிண்ணம்

# பிரேசில் காலிறுதிக்குள் நுழைவு



(கோகோடா)

உலகக்கிண்ண இளையோர் கால்பந்து (20 வயதுக் குட்பட்டோர்) தொடரின் காலிறுதிக்கு ஸ்பெ யின், பிரேசில், பிரான்ஸ், நைஜீரியா உள்ளிட்ட அணிகள் முன்னேறியுள்ளன.

கொலம்பியாவில் பிபா 20 வயதுக்குட் பட்டோருக்கான உலகக்கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது ;இதில் காலிறுதிக்கு முந்திய சுற்றில் ஸ்பெயின், தென் கொரியா அணிகள் மோதின .இதில் அபார ஆட்டத்தை வெளிப் படுத்திய ஸ்பெயின் அணி 7-6 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு போட்டியில் பிரான்ஸ்-ஈகுவேட்டர் அணிகள் மோதின. இதில் பிரான்ஸ் அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதிபெற்றது. காலிறுதியில் பிரான்ஸ்-நைஜீரியா அணிகள் மோதுகின்றன.

பிரேசில் வெற்றி

மற்றொரு ஆட்டத்தில் பிரேசில் - சவுதி அரேபியாவை சந்தித்தது. இதில் பிரேசில் அணி 3 : 0 என்ற கோல்கணக்கில் வெற்றி கண்டது பிரேசில் அணிக்கு ஹென்றி கியூ ( (46 வது நிமிடத்திலும்),கேப்ரியல் சில்வா(69 வது நிமிடத்திலும்),டடு(86 வது நிமிடத்திலும்) தலா ஒரு கோல் அடித்தனர் இதன்முலம் பிரேசில் அணி காலிறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு போட்டியில் நைஜீரியா - இங்கிலாந்து அணிகள் மோதின. நைஜீரியா அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.இதன்மூலம் காலிறுதியில் நைஜீரியா அணி, பிரான்சை எதிர்கொள்கிறது.




## பொத்துவிலில் ஊரடங்கு அமுலில்

பொத்துவில் பிரதேசத்தில் பொலிஸார் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளனர். நேற்று இரவு முதல் இன்று காலை 6.00 மணிவரை இந்த ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பொத்துவிலில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# பதிவு செய்யப்படாத காணிகளை அரசுடமையாக்கத் திட்டம்!

(கொழும்பு)

வடக்குக் கிழக்கிலுள்ள அனைத்துக் காணி உரிமையாளர்களும் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதேவேளை இவ்வாறு பதிவு செய்யப்படாத காணி உரிமையாளர்களின் நிலங்கள் அரசுடமையாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன்படி வடக்குக் கிழக்கில் உள்ள அனைத்துக் காணி உரிமையாளர்களும் அந்தந்தப் பிரதேச செயலகத்தில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களை பெற்று கிராம அதிகாரியின் பரிந்துரையுடன் பூர்த்திசெய்து ஒப்படைக்க வேண்டும்.

அதேவேளை புலம்பெயர்ந்து வாழ்கின்றவர்கள் தமது காணிகள் தொடர்பான பதிவுகளை இணையத்தளத்தின் மூலம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த அறிவித்தல் அடுத்த வாரம் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் வெளியிடப்படவுள்ளது.

அதேவேளை பதிவு செய்யப்படாத காணி உரிமங்களை அரசுடமையாக்கி அந் நிலங்களில் குடியேற்றங்களை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இந்நிலையில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்களின் காணிகளைச் சுவீகரிக்கவே இலங்கை அரசாங்கம் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (எ-5)

# தமிழகத்தில்...

ஆத்தூர், தலைவாசல், விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, சின்னச்சேலம் ஆகிய இடங்களில் நில அதிர்வு ஏற்பட்டது.

இதையடுத்து மக்கள் பீதியில் உறைந்தனர். வீடு, அலுவலகங்களை விட்டு வெளியேறி தெருக்களில் திரண்டனர். சில நொடிககள் நில அதிர்வு நீடித்ததாக மக்கள் தெரிவித்தனர்.

கள்ளக்குறிச்சி பெரிய சிறுவத்தூரில் நில அதிர்வால் ஆறுமுகம் என்பவர் பலியாகி உள்ளார். புதிதாக கட்டப்படும் வீட்டிலிருந்த ஆறுமுகம் என்பவர் அதிர்வை உணர்ந்த போது உயிரிழந்துள்ளார்.

இந்த நில அதிர்வு பயத்தின் காரணமாக பெற்றோர்கள் அவசர அவசரமாக தங்களது குழந்தைகளை பள்ளிகளிலிருந்து அழைத்துச் சென்றனர். இந்நிலையில் நில அதிர்வை தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டத்திலும் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. கடலூர் மாவட் டம் திட்டக்குடியில் உள்ள பள்ளிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டது.

நில அதிர்வை குறித்து பொது மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம் என்று சேலம் மாவட்ட ஆட்சியர் மகரபூஷணம் தெரிவித்துள்ளார். கடந்த ஜுனிலும் சேலம் மாவட்டத்தில் நில அதிர்வு உணரப்பட்டது. இந் நிலையில் தொடர்ந்து ஏற்படும் இந்த நில அதிர்வு குறித்து ஆய்வு நடத்தப்படும் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார். (ச-5)

# கரு ஜெயசூரியவுக்கு தலை...

கட்சிக்குள் ஒற்றுமையை நிலைநாட்டும் அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிப் பாதையை நோக்கிக் கொண்டு செல்லும் பாரிய பொறுப்பினை நிறைவேற்றுவதற்காகவே கரு ஜெயசூரியவை தலைவராக நியமிக்கும் தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளோம். இந்த முயற்சி வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

இதேவேளை, ஏகாதிபத்தியத்தை விரும்பாத தலைவரொருவரின் அவசியம் இந்த நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் தற்போது ஏற்பட்டுள்ளது. இதனால் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் கரு ஜயசூரியவை தலைவராக்கும் தீர்மானத்தை நிறைவேற்றுவோம்.

இதற்கு. கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவிப்பார்கள் என்று நம்புகின்றோம். அப்படி ஆதரவு தெரிவிக்காதவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஒப்பந்தங்களுக்குத் துணை போனவர்கள் என்றே கருத நேரிடும் என்றார். (எ-5)

# வாழைச்சேனையில்...

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை பொதுமக்கள் இராணுவத்திற்கு அடையாளம் காட்டியுள்ளனர். இராணுவத்தினர் அவரை அனுப்ப முற்பட்டபோது மக்கள் ஆத்திரமடைந்ததுடன் பெருந்திரளான மக்கள் அவ்விடத்தில் கூடி புகையிரதத்தை மறித்துள்ளனர்.

நீர் கொழும்பைச் சேர்ந்தவர் எனத் தன்னை அடையாளப்படுத்திய குறித்த சந்தேகநபர்– தான் கொழும்பு செல்லவுள்ளதாக தெரி வித்தார். இருப்பினும் அவர் வெலிகந்தைக்குச் செல்வதற்கு பயணச் சீட்டு எடுத்ததை அடுத்து மேலும் குழப்பமடைந்த பொதுமக்கள்– சித்தாண்டி இராணுவப் படைப்பிரிவிற்கு அறிவித்ததை அடுத்து அவர்களின் அறிவுறுத்தலுக்கமையவாழைச்சேனைப் பொலிஸார்சம்பவ இடத்திற்குச்சென்று பொதுமக்களிடமிருந்து குறித்த சந்தேகநபரை பாதுகாக்கவும் மேலதிக விசாரணை மேற்கொள்ளவெனகூறிவாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தை அடுத்துவாழைச்சேனைப் பிரதேசத்தில் சிறு பதற்ற நிலை காணப்படுகிறது. (எ-5)

# இலங்கைக்கு உதவ...

இதன்போது சர்வதேச அளவில் இலங்கை எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளை தீர்ப்பதில் ஒத்துழைப்பு வழங்க சீனா உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சீனாவின் உதவிகளையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இரு நாடுகளுக்கும் இடையில் சகல விடயங்களிலும் ஒத்துழைப்பையும், புரிந்துணர்வையும் வலுப்படுத்துவதில் தான் ஆர்வமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்தவுடன் சீன விஜயத்தை மேற்கொண்டிருக்கும் வெளிநாட்டு அமைச்சர் ஜி.எல். பீரிஸ், அரச ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் சீனா வழங்கியுள்ள வாக்குறுதி குறித்து உறுதிப்படுத்தியுள்ளார்.

சர்வதேச அரங்கில் கடும் அழுத்தங்களை எதிர்கொண்டு வரும் எமக்கு தேவைப்படும் வேளையில் தனது முழுமையான ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்க சீனா உறுதியளித்துள்ளது.

இந்த ஒத்துழைப்பக்கான உறுதி மொழியை சீனப் பிரதமர், மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது இவ் உறுதி மொழியை வழங்கியதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஏப்பிரல் மாதம் வெளியான ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாகவும் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை சீனா எடுத்ததை இவ் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேவேளை சீனா– இலங்கை உறவுகள் குறித்தும் தற்போது ஜனாதிபதி மகிந்தவின் சீன விஜயத்தின் பின் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் குறித்தும் இந்தியா மௌனம் சாதித்து வருகின்ற போதும் இவ் விடயம் தனது கைகளை மீறி சென்று விடலாம் என இந்தியா அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் இரு நாடுகளுக்கம் இடையிலான உறவும், ஒத்துழைப்பும் மேம்பட்டு வருவதுடன் இரு நாடுகளுமே இதனால் பெரும் பலனடைந்து வருவதாக சீனப் பிரதமர் இச் சந்திப்பின் போது குறிப்பிட்டார். (ச-5)

Group Classes
Chemistry
For A/L
Science
(English & Tamil Medium)
for Grade 6-11
By: J.Uthajan
B.Sc(with Edu.)(Hons)
Computer Courses
Ms.Office, Hardware,
DTP, ICT&GIT
தொடர்புக்கு: 0776569576,0776701661
மாணவர்களுக்கு ஏற்ற
நேரங்களில் கற்பிக்கப்படும்.
Studiwel Institute
K.K.S. Road, Kokuvil Junction
(கொக்குவில் இந்து அருகில்)
(5798)

IDM சுன்னாகம்
தொழில் வெற்றித்திறன் கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்- 15.08.2011
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டது.
BIBM, ICDL, ECDL, Dip in ICT.
OnLine Test Center Available
OnLine Exam
5/115, K.K.S. Road, Chunnakam.
T.P:- 0217451885, 0217451886
(சி-4029)

மணிவிழா நாயகனை
வாழ்த்துகின்றோம்
பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்

வேலையின்றிளைஞர் வாடும்
வெறுமையில் வழிகள் மாறும்
காலம்- மாற்றலின் கோலக்
கவலையில் தனிமையாகி
சோகமுற்றிருக்கும் தந்தை
தாய் துயரம் போக்கும்
சேவைசெய் கழகத்தோடும்
செயல்புரிந்(து) உயர்ந்தீர் வாழி!
இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி
காலம்: 14.08.2011 பி.ப. 02மணி (ஞாயிற்றுக்கிழமை)
பேராசிரியரின் அன்புள்ளங்கள் இதனை தனிப்பட்ட
அழைப்பாகக் கருதி சமுகந் தரவும்.
—தேவா மணிவிழா சபை
வாழ்த்துவோர்:
சாந்தி ரெக்ஸ் ரைல்
இணுவில், யாழ்ப்பாணம்
(சி-3913)


220 இற்கு மேற்பட்ட
DHL
உலக நாடுகளுக்கான
துரித தபால், பொதிகள் சேவை
உங்களுக்குத் தேவையான அனைத்து பொருள்களையும் உலக நாடுகளுக்கு அனுப்பி DHL மூலம் பெற்றுக்கொள்ள சிறந்த சேவையை வழங்குகிறது.
திருமுருகன் கொம் நெற்
வெளிநாட்டு கடவுச்சீட்டு உடைய
ஒருவருக்கு விசேட விலைக்கழிவு உண்டு.
வட மாகாணத்திற்கான உங்கள் DHL முகவர்
திருமுருகன் கொம் நெற் மட்டுமே...!
* போலி முகவர்களிடம் ஏமாற வேண்டாம்.
* விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
(C-4030)
இல.259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல.05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல.46,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
TCN Express
2 B NELSAN PLACE, COLOMBO-06.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.